

ශ්‍රී ලංකා ගුවන්විදුලි සංස්ථාව

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

Sri Lanka Broadcasting Corporation

2019

වාර්ෂික වාර්තාව

ஆண்டறிக்கை

Annual Report

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

ஆண்டறிக்கை

மற்றும்

நிதிக் கூற்றுக்கள்

2019

2019 சனவரி 01 ஆம் திகதி முதல் டிசம்பர் 31 ஆம் திகதி வரை

கௌரவ வெகுசன ஊடக அமைச்சர்,

வெகுசன ஊடக அமைச்சு

கொழும்பு.

கௌரவ அமைச்சர் அவர்களுக்கு,

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 (1) ஆம் வாசகத்தின் பிரகாரம் 2019 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான பின்வரும் ஆவணங்கள் உள்ளடங்கலான கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையை இத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.


1. 2019 சனவரி மாதம் 1 ஆம் திகதி முதல் 2019 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலான வருடத்திற்கான இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பணிகள் தொடர்பான நிருவாக அறிக்கை

2. 2019 சனவரி மாதம் 1 ஆம் திகதி முதல் 2019 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலான நிதி ஆண்டிற்கான கணக்குகள் தொடர்பான அறிக்கை

3. 2019 சனவரி மாதம் 1 ஆம் திகதி முடிவடைந்த கணக்குகளுக்கான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை

4. 2019 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கைக்கு கூட்டுத்தாபனம் சமர்ப்பித்த தெளிவுபடுத்தல்

இங்ஙனம் - உண்மையுள்ள



தலைவர்,

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்,

கொழும்பு 07

2022. 01. 19

உள்ளடக்கம்

		பக்க இல
1	நிருவாக அறிக்கை	01
2	வருடாந்த நிதிக் கூற்றுக்கள்	11
3	நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை	39
4	2019 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கைக்கான கூட்டுத்தாபனத்தின் தெளிவுபடுத்தல்	51

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

தொலைநோக்கு

சிறந்த இலத்திரனியல் ஊடகக் கலாசாரத்திற்கான முன்மாதிரியினை வழங்குதல்.

செயற்பணி

பல்லின,பன்மொழி, பல மத சமூகத்தில் நல்லிணக்கம், பொருளாதார அபிவிருத்தி மற்றும் சனநாயகக் கட்டமைப்புக்களை வலுப்படுத்தும் தனிநபர் அபிவிருத்தியை நோக்கிய ஊடகப் பணியில் ஈடுபடுதல்.

நோக்கங்கள்

1. உலகெங்கிலும் உள்ள அரசியல், பொருளாதார மற்றும் சமூக முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் பற்றிய தகவல்களைச் சேகரித்து சரியாக மக்களிடையே பகிருதல்.
2. மக்கள் வாழும் சூழலில் சமூகத்தின் சுறுசுறுப்பான நபர்களாகச் செயற்பட அவர்களுக்கு தேவையான பொது அறிவைப் பெற பொதுமக்களுக்கு அவசியமான இடமளித்தல்.
3. சமூகத்திற்கு அவசியமான ஒரு பொது அறிவு நிதியமொன்றை நிறுவுதல்.
4. மனித இருப்புக்கான சவால்களை அடையாளம் கண்டு அவற்றிற்குத் தேவையான அறிவை வழங்குதல்.
5. சமுதாயத்தின் விரைவான மற்றும் இறுதி இலக்குகளை மேம்படுத்துவதற்கான உந்துதலை வழங்குதல்.
6. பொதுவான சிக்கல்களின் அடிப்படைகளை வரையறுத்தல், தீர்க்க உதவுதல்.
7. தனிப்பட்ட திறன்கள், தன்மை மற்றும் அறிவுசார் வளர்ச்சிக்கு அறிவு மற்றும் ஊக்கத்தை வழங்குதல்.
8. ஒரு தேசத்தின் அல்லது ஒரு சமூகத்தின் கலாசாரத்தை அடையாளம் காணுதல்,பாதுகாத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல்.
9. பொழுதுபோக்குக்காக செயற்படுதல்
10. வெவ்வேறு சமூகங்களுக்கிடையில் பரஸ்பர புரிதல், சகவாழ்வு மற்றும் மரியாதை ஆகியவற்றிற்காக செயல்படுதல்
11. புதிய தொழில்நுட்ப மாற்றங்களை இற்றைப்படுத்தி நடைமுறைப்படுத்துதல்

நிருவாக அறிக்கை - 2019

நிருவாக அறிக்கை - 2019

அறிமுகம்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமானது 1966 ஆம் ஆணடின் 37 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் 1967 ஆம் ஆண்டு சனவரி மாதம் 05 ஆம் திகதி முதல் செயற்படுமாறு மீண்டும் நிறுவப்பட்டது.

இந்த அறிக்கையானது 2019 சனவரி 1 ஆம் திகதி முதல் டிசம்பர் 31 வரையிலான 12 மாத காலத்தை உள்ளடக்கியது.

மீளாய்வு காலப்பகுதியில் பின்வரும் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையில் அங்கம் வகித்தனர்.

1 திரு. மாலக தல்வத்த	தலைவர் / கூட்டுத்தாபன பணிப்பாளர் சபை உறுப்பினர்
2 திரு. ஹெரால்ட் சேனாதீர	செயற்பாட்டுப் பணிப்பாளர் / கூட்டுத்தாபன பணிப்பாளர் சபை உறுப்பினர்
3 திரு. எம். ஜே. ஆர் டேவிட்	கூட்டுத்தாபன பணிப்பாளர் சபை உறுப்பினர்
4 திரு. ஏ. எம்.பீ. டீ. பி. அபேசிங்க	கூட்டுத்தாபன பணிப்பாளர் சபை உறுப்பினர்
5 பேராசிரியர் அசங்க குணவங்ச	கூட்டுத்தாபன பணிப்பாளர் சபை உறுப்பினர்
6 திரு. டப்ளியூ. ஏ. பீ. விமலசிறி	கூட்டுத்தாபன பணிப்பாளர் சபை உறுப்பினர்

- **சிங்கள தேசிய சேவை**

FM 91.7 மற்றும் 91.9 இல் ஒலிபரப்பாகும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சிங்கள தேசியச் சேவை, இலங்கை மக்களின் தொடர்புத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் சிறப்பான பங்கைக் கொண்டுள்ளது. மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில், அந்த தனிப்பட்ட பொறுப்பை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை தேசிய சேவையால் திறம்பட செயல்படுத்த முடிந்தது. மக்களின் வாழ்க்கையின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய பொருளாதார, சமூக, கலாசார, ஆன்மீக மற்றும் தார்மீகத் துறைகளில் முன்னேற்றம் காண, 2019 ஆம் ஆண்டிலும், முந்தைய ஆண்டுகளிலிருந்து தொடர்ந்தும் நடாத்தி வந்த நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்தியது மட்டுமல்லாது புதிய நிகழ்ச்சிகளும் அறிமுகப்படுத்தப்பட்டன. சுதந்திர தினம், சிங்களம் மற்றும் தமிழ் புத்தாண்டு விழா, உலக தொழிலாளர் தினம், வெசாக் மற்றும் மத சார்பற்ற சிறப்பு நாட்கள், சிறப்பு சந்தர்ப்பங்கள் மற்றும் சிறப்பாக பெயரிடப்பட்ட தேதிகள் உட்பட அனைத்து பௌர்ணமி தினங்களையும் உள்ளடக்கிய நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டு விளம்பரப்படுத்தப்பட்டன.

சமூகப் பிரச்சினைகள்,சிக்கல்கள் மற்றும் தேவைகள் குறித்து பொறுப்பான தரப்பினரின் கவனத்தை ஈர்ப்பதற்காகவும், பொதுக் கருத்துக்கு ஒரு தளத்தை உருவாக்குவதற்காகவும், “சத்யக்ஷணய” என்ற குழு கலந்துரையாடல் நிகழ்ச்சியானது 2019 ஆம் ஆண்டில் மாதமொன்றிற்கு ஒரு நிகழ்ச்சி என்ற வீதத்தில் 12 நிகழ்ச்சிகள் விளம்பரப்படுத்தப்பட்டன.

பாடல் இலக்கியம் பற்றிய கச்சேரி மற்றும் கலந்துரையாடல் நிகழ்ச்சியாக நேயர் சமூகத்தின் இரசனையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, பல்வேறு துறைகளைச் சேர்ந்த சிரேஷ்ட மற்றும் புதிய கலைஞர்களின் பங்கேற்புடன் "மீலங்க மீவித" என்ற தலைப்பில் 12 நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டுள்ளன.

2019 ஆம் ஆண்டு சர்வதேச மகளிர் தினத்தன்று "பெண்ணிய தலைமைத்துவம் மற்றும் ஒரு நெறிமுறை அரசியல் கலாசாரத்திற்கான இணைந்த ஊடகத்தின் பொறுப்பு" பற்றிய அறிவார்ந்த சொற்பொழிவாக ஒரு கொண்டாட்ட விழாவொன்றும் மற்றும் பயிற்சிச் செயலமர்வொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டன.

"அமைச்சரைக் கேளுங்கள்" நிகழ்ச்சியானது சுகாதார சேவை தொடர்பாகப் பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் நோக்கில் கௌரவ அமைச்சரைத் தொடர்புபடுத்தி கலந்துரையாடல் நிகழ்ச்சியொன்றாக ஒலிபரப்பியமையானது 2019 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட ஒரு வெற்றிகரமான நிகழ்ச்சியாகும்!

ஒரு குறிப்பிட்ட ஒலிபரப்பு நேரத்தை உள்ளடக்கும் விதமாக தேசிய சேவை ஒலிபரப்பு நேரத்தினுள்கல்வி நிகழ்ச்சிகள் செயல்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் அதே போல் 2019 ஆம் ஆண்டிலும், பரீட்சைகள் திணைக்களத்துடன் இணைந்து, பிரதான பரீட்சைகளை முன்னிட்டு மாணவர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், பாடப்பிரிவு சார்ந்த, தனித்துவமான கற்பித்தல் முறைகளை கற்பிக்கும் அரசாங்கப் பாடசாலை ஆசிரியர்களை ஈடுபடுத்திமாணவர்களின் பாட அறிவை வளர்க்கத் தேவையான நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டு ஒலிபரப்பப்பட்டன. இந்த நிகழ்ச்சிகள் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம் மற்றும் உயர்தர பரீட்சைகளை இலக்காகக் கொண்டவை. 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்காகமாணவர்களுக்குக் கல்வி கற்பிப்பதை நோக்கமாகக் கொண்ட நிகழ்ச்சிகளை கல்விச் சேவை ஒலிபரப்பு நேரத்தில் ஒலிபரப்பப்பட்டன.

விதுல சிறுவர் வானொலி தேசிய சேவை ஒலிபரப்பு நேரத்தில் ஒலிபரப்பப்படுகின்றது. வானொலி சிறுவர் கலைஞர்களை உருவாக்குவதும், அவர்களின் ஈடுபாட்டோடு தரமான சிறுவர் நிகழ்ச்சிகளை உருவாக்குவதும் வானொலியின் பொறுப்புகளில் ஒன்றாகும். முந்தைய ஆண்டுகளைப் போலவே, 2019 ஆம் ஆண்டின் நாட்டின் சிறுவர்களுக்கான "விதுல சாரிகா" என்ற வரலாற்று இடங்கள் பற்றிய தொடர் நிகழ்ச்சிகள், "புஞ்சி சித்தட தஹம் சிசில" எனும் பெயரில் பிறந்தநாள் கொண்டாட்டங்களுக்கான சமய சொற்பொழிவுத் தொடர்,விதுலசிறுவர் பாடல் மற்றும் இசைக்குழுக்களின் பங்கேற்புடன் "ரட்டட பிபென மல்" என்ற பெயரில் விதுலசிறுவர் வானொலியில் 2019 ஆம் ஆண்டில் ஒரு தேசபக்தி சங்கீதக கச்சேரியை ஒலிபரப்பியது.

ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் வருவாய் ஈட்டுவதற்கு சிறப்புப் பங்களிப்பாக இருக்கும் சமயப் பிரிவு, உள்ளூர் சேவை அலைகளில் பிரசங்கங்களை ஒலிபரப்புவதன் மூலம் கேட்போரை ஒரு ஆன்மீக வாழ்க்கைக்கு வழிநடத்துவதன் மூலம் மத சொற்பொழிவுகளிலும் அத்துடன் மத விழாக்களில் பங்கேற்கச் செய்தது.

- **வர்த்தக சேவை**

FM 94.3 மற்றும் 94.5 இல் ஒலிபரப்பப்படும் சிங்கள வர்த்தகசேவை, முந்தைய ஆண்டுகளைப் போலவே 2019 ஆம் ஆண்டிலும் பொருளாதார, சமூக, கலாசார, மத, அரசியல் மற்றும் இசை நிகழ்ச்சிகளை ஒலிபரப்பியது. தற்போதைய தலைப்புகளை கலந்துரையாடும் "சார பிரபாகிர" திட்டம்,சுற்றாடல் அமைச்சு மற்றும் தேசிய ஓசோன் மண்டலத்தைப் பாதுகாக்கும் நோக்கில் வழங்கும் "சொபா கெத" நிகழ்ச்சி, "ஹந்தமாமா", "சுவ அரண", "கொவிஜன அபிமன்" போன்ற சமூகப் பெறுமதி கொண்ட நிகழ்ச்சிகள், "உருமய ரகிமு தெய சுரகிமு". "முவன்பெலஸ்ஸ", "சந்தஹம் தஹர" சமய நிகழ்ச்சி,

“அமைச்சரிடம் கேளுங்கள்”, “ஷான் விஜேதுங்கவுடன் ஒரு மணிநேரம்” போன்ற அரசியல் நிகழ்ச்சிகள் “ரேடியோ கொலம”, “பாலிவுட் பாடல்கள்”, “கீத சம்பாவநாம”, “மந்தாகிணிய”, “ஸ்வர வசந்தய” மாலதி லதா, ஓபே நமீன் கீ, சலரு சேயா, மதுரசாங்க, திவா தெஹென,சொந்துரு செவன, ரன்தரு விமன,சொந்துரு மினிசா, தர்ம பிரதீபிகாவ,செத்கவி” போன்ற நிகழ்ச்சிகள் “ரஸ ஜனனி”, “மனித ஊட்டச்சத்து மற்றும் பல்லுயிர்”, “யசோதரா” ஆகிய அனுசரணை நிகழ்ச்சிகளும் 2019 ஆம் ஆண்டில் வர்த்தக சேவை ஒலிபரப்பு நேரத்திற்கு மெருகூட்டிய நிகழ்ச்சிகளாகும்.

- **சிட்டி எஃப்எம் சேவை**

FM 89.6 மற்றும் 89.8 இல் ஒலிபரப்பப்படும் சிட்டி எ.ஃப்எம் சேவை, உயர் தரமான கேட்கும் சமூகத்தை உருவாக்கும் பொருட்டு, துல்லியமாகவும் நம்பகத்தன்மையுடனும் கேட்போருக்கு அறிவையும் தகவலையும் வழங்கி, போட்டியிடும் வானொலி நிலையங்களில் பிரபலமான தரமான வானொலி நிலையமாக மாறுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. முந்தைய ஆண்டுகளைப் போலவே, எ.ஃப்எம் அந்த இலக்கை அடைய மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிலும் ஒலிபரப்பு நேரத்தை இயக்கியுள்ளது. “என்எல்பி பிரார்த்தனா” எனும் பாடல் இரசனை நிகழ்ச்சி, “முழுரடம எலியய் தசதம கல எலியய்” கேள்வி வர்ணனை நிகழ்ச்சி, பிஎம்ஐசிஎச் - இல் இலங்கை வங்கியின் அணுசரணையுடன் நடாத்தப்படும் “ஆராதனா ஸ்வர தெஹென” ஆகியன 2019 - ல் நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சிகளாகும். பாடசாலை மாணவர்களின் இரசனையை விரிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்ட மாதாந்தநிகழ்ச்சியாக நாடு முழுவதும் பாடசாலைகளைத் தொடர்புபடுத்தி “மிஹிர மனரம்” மீளாய்வாண்டில் வெற்றிகரமாக ஊக்குவிக்கப்பட்டது. சிரேஷ்ட இசைக்கலைஞர் ஸ்டான்லி பெர்னாண்டோ 2019 ஆம் ஆண்டு முழுவதும் பல நிகழ்ச்சிகளில் இடம்பெற்றார், இதில் ஒரு இசை நிகழ்ச்சி, “பாட பொடக்” என்ற தலைப்பில் ஒரு ஜோதிபால அஞ்சலி பாடல் நிகழ்ச்சி, “ஆதரகந்த” என்ற விளம்பர நிகழ்ச்சி மற்றும் புத்தாண்டு மற்றும் கிறிஸ்துமஸ் சிறப்பு நிகழ்ச்சிகள் உள்ளடங்கும்.

- **தமிழ் தேசிய சேவை**

FM 102.1 மற்றும் 102.3 இல் ஒளிபரப்பப்படும் தமிழ் தேசிய சேவை, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் பிரிவின் முதன்மை வானொலி அலைவரிசையாகும்.. மீளாய்வாண்டின் கடந்த 12 மாதங்களில், தமிழ் தேசிய சேவை மக்களின் மத, சமூக, கலை, கலாசார மற்றும் அரசியல் தகவல்களில் ஆர்வமுள்ள மக்களின் நலனுக்கான திட்டங்களை ஊக்குவித்து வருகிறது. தமிழ் கல்வி சேவை மற்றும் முஸ்லிம் சேவை ஆகியன தமிழ் தேசிய சேவையின் ஒலிபரப்பு நேரத்தில், பல்வேறு தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள், சிறப்பு நிகழ்ச்சிகள், பிராந்திய நிகழ்வுகள், நடப்பு விவகாரங்கள்,சிறுவர் நிகழ்ச்சிகள், கலந்துரையாடல்கள் மற்றும் பல்வேறு பரிமாணங்களில் உரையாடல் நிகழ்ச்சிகளை தயாரித்து ஒலிபரப்புகின்றது.

தினசரி ஒலிபரப்பப்படும் “விடியும் வேளை” நிகழ்ச்சி, வானொலியில் சிறப்பு நிகழ்ச்சியாக நேரடி ஒலிபரப்பு செய்யப்படும் தைப்பொங்கல் விழா, 71 வது சுதந்திர தின கொண்டாட்டங்கள், மகாசிவராத்திரி நேரடி ஒலிபரப்பு, புத்தாண்டு நிகழ்ச்சிகள், போதை ஒழிப்பு நிகழ்ச்சிகள்,மடுமாதா ஆலய விழா,சரஸ்வதி பூஜை, கரோல் கச்சேரி, கிறிஸ்துமஸ் நாள் நிகழ்ச்சி டிசம்பர் 31 இரவு கடவுள் வழிபாடு, நாடகங்கள் மற்றும் சர்வதேச தினங்களுடன் இணைந்த நிகழ்ச்சிகள்உட்படபல நிகழ்ச்சிகள் 2019 ஆம் ஆண்டில் ஒலிபரப்பப்பட்டன.

- **முஸ்லிம் சேவை**

FM 102.1 மற்றும் 102.3 தமிழ் தேசிய சேவை அலைவரிசைகளில் ஒலிபரப்பாகும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முஸ்லிம் சேவை, இலங்கை முஸ்லிம் சமூகத்திலும் தென்னிந்தியாவிலும் 65 ஆண்டுகளுக்கும் மேலாக பிரபலமாக உள்ளதுடன் மற்றும் முஸ்லிம் சமூகம் சார்பாக ஒலிபரப்பப்படும் ஒரே தேசிய வானொலி அலைவரிசையாகும். நேரம் 0545-0550, 0800-1030, 2000-2100 முஸ்லீம் சேவை ஒலிபரப்பு நேரமாவதுடன், மற்றும் அணுசரணை கிடைத்தால்,அதற்குரிய ஒலிபரப்பு நேரம் பயன்படுத்தப்பட்டு முஸ்லீம் சேவை நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படும். சமய நிகழ்ச்சிகள்,சிறுவர் நிகழ்ச்சிகள், இசை மற்றும் நாடக நிகழ்ச்சிகள், வினாடி வினா நிகழ்ச்சிகள், இளைஞர் சஞ்சிகை நிகழ்ச்சிகள், தேசிய அளவில் முக்கியமான நிகழ்ச்சிகள், இலங்கை மலாய் மக்களுக்காக உருவாக்கப்பட்ட மலாய் நிகழ்ச்சிகள், உருது மொழி பேசுவது தொடர்பான நிகழ்ச்சிகள் 2019 ஆம் ஆண்டில் ஒலிபரப்பப்பட்டது. ரமழானின் போது,முஸ்லிம் சேவை இலங்கை முஸ்லீம் சமூகத்துடன் ஒன்றிணைந்து,அம்மாத நிகழ்ச்சிகளுக்காக முழுமையாக வாடிக்கையாளர் அனுசரணை வழங்கும் நிகழ்ச்சிகளை ஊக்குவிக்கிறது.

முஸ்லிம் சேவையின் தலையீட்டின் காரணமாக,சிங்கள தேசிய சேவையில் இஸ்லாமிய சமய நிகழ்ச்சியொன்று சிங்கள மொழியில் ஒலிபரப்பப்படுகிறது.

2019ஆம் ஆண்டில் முஸ்லிம் சேவையின் ஆண்டு வருமானம் ரூபா. 47,817,823.98 ஆகும்.

- **தென்றல் சேவை**

FM104.7 மற்றும் 104.9 வழியாக ஒலிபரப்பபடும் தென்றல்,நேயர்களின் பல்வேறு வகையான இரசனைத் தேவைகளுக்காக 2019 ம் ஆண்டினுள்நிகழ்ச்சிகளை ஒலிபரப்பியது. தென்றல் சேவையானது விசேடமாக இளைஞர்களை நோக்காகக் கொண்டே ஒலிபரப்பப்படுகின்றது. பல்வேறு சமூக மட்டங்களைப் பிரதிநிதித்துப்படுத்தும் தமிழ் சமூகத்தினரின் இரசனையைத் திருப்திப்படுத்தும் நோக்கில் 2019 ம் ஆண்டினுள் இரசனைவளம் கொண்ட பல நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டதுடன் தமிழ் தேசிய சேவைக்கு இணையாக தேசிய, அரசியல், பாதுகாப்பு மற்றும் கலாசார அடிப்படையில் முக்கியத்துவம் வாய்ந்த சந்தர்ப்பங்களுக்காகவும் பல்வேறு நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டன.

- ஆங்கில சேவை

70 வருடங்களுக்கும் அதிகமான காலம் பூராகவும் விசேட இரசனை கொண்ட மக்கள் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆங்கில மொழி மூல அலைவரிசையாகியோடு ஒன்றிணைந்துள்ளதுடன் 2019 ஆம் ஆண்டில் கலாசார, சமய, சமூக, இரசனை மற்றும் காலரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த பல நிகழ்ச்சிகள் ரேடியோ சிறீலங்காவினூடாக ஒலிபரப்பப்பட்டன. தேசிய மற்றும் சர்வதேச முக்கியத்துவத்துடன் விசேட தினங்களையிட்டு 2019 ஆம் ஆண்டில் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டன. பழைய பாடல்களை விரும்பும் அதிகளவிலான நேயர்கள்ரேடியோ ஸ்ரீலங்காவுடன் இணைந்துள்ளதுடன் அவர்களது இரசனையைத் திருப்திப்படுத்தும் நோக்கில் ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆங்கில சேவை மிகப் பழைய சிறந்த மற்றும் விநோதமான நிகழ்ச்சிகளையும் அனைத்துப் பாடல்களையும் ஒலிபரப்புவது ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆங்கில சேவையின் பிரதான பணியாகும்.

உலக சிறுவர் தினத்தையிட்டு, 10 பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 100 மாணவர்களின் பங்கேற்புடன் வானொலி நிகழ்ச்சியொன்று தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. ‘‘கோல்டன்

மெலடீஸ்''என்ற பெயரில் நடாத்தப்பட்ட இசை நிகழ்ச்சியானது 2019 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட விசேட நிகழ்ச்சியாக அடையாளம் காணலாம்.

- **பிராந்திய சேவை**

மீளாய்வாண்டினுள், பிரதான பிராந்திய சேவைகளாகிய சிங்கள மொழியில் ஒலிபரப்பப்படும் ரஜரட்ட, ருகுண, கந்துரட்ட மற்றும் வயம்ப சேவைகள் செயற்படுகின்றன. கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களை நோக்காகக் கொண்டு பிறை எ.ஃ.ப்எம் சேவையும் யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு யாழ் எ.ஃ.எம் சேவையும் தமிழ் மொழி மூலமான பிராந்திய சேவைகளாகச் செயற்படுகின்றன. ரேடியோ தம்பான, தம்பானையிலுள்ள ஆதிவாசிச் சமூகத்தினரை மையமாகக் கொண்ட மக்கள் வானொலியாகச் செயற்படுகின்றது.

அந்தந்த கேட்கும் வலயங்களில் வாழும் மக்களின் விவசாய, கல்வி, சுகாதாரம், சுற்றுச்சூழல், விளையாட்டு மற்றும் வேறு முக்கியமான விடயங்களுடன் தொடர்புடைய தலைப்புகள் வழியாக வழங்கப்படும் நிகழ்ச்சிகளைத் தயாரித்து ஒலிபரப்புவது பிராந்திய சேவைகளினூடாக மேற்கொள்ளப்படும்.

முன்னைய 2019 ஆண்டிலும்,கேட்கும் வலயங்களை முன்னிலைப்படுத்தி தேசிய வைபவங்கள், போயாநிகழ்ச்சிகள்,ஏனைய சமய நிகழ்ச்சிகள்,பெரஹர போன்ற கலாசார நிகழ்ச்சிகள், குறிப்பிட்ட பிரதேசத்தின் பிரச்சினைகளாக அடையாளங்காணபபடும் சிறுநீரக நோய், தலசீமியா போன்ற நோய்கள் தொடர்பான நிகழ்ச்சிகள், பல வரலாற்று நிகழ்ச்சிகள் இந்த பிராந்திய சேவையினூடாக ஒலிபரப்பப்படும்.

ஆதிவாசி சமூகத்தினரின் கலாசார அம்சங்கள், மொழி, கலை மற்றும் கலைகளைத் தொடர்ந்தும் பராமரித்துச் சென்று அவர்களது வாழ்க்கையைமுன்னேற்றுவதை நோக்கமாகக் கொண்ட தேசிய பொறுப்பு மற்றும் சேவையாக 2019 ஆம் ஆண்டினுள் ரேடியோ தம்பான,சமூக வானொலியொன்றினது நோக்கத்தை அடைந்துள்ளது.

- **செய்தி மற்றும் நடப்பு நிகழ்ச்சிப் பிரிவு**

மிகவும் சரியான செய்திகளைப்பொறுப்பு மற்றும் நம்பிக்கையுடன் மக்களுக்கு வழங்குவது ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் செய்திப் பிரிவின் பொறுப்பாகும். 2019 ஆம் ஆண்டில் நாளாந்தம் 04 செய்தி ஒலிபரப்புகள் மும்மொழிகளிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நம்பகத்தன்மைக்காகக் குரல் கொடுக்கப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக, மணித்தியாலயச் செய்திகள், நாட்குறிப்பு, சிறுவர் நிகழ்ச்சி போன்றவற்றை ஒலிபரப்புவதும் செய்திப் பிரிவின் மேற்பார்வை மற்றும் ஈடுபாட்டின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதற்கு மேலதிகமாக பாராளுமன்ற அமர்வுகளை நேரடி ஒலிபரப்புச் செய்தலும் 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது.

தற்போது மக்கள் மிகவும் நெருங்கியுள்ள புதிய ஊடகங்கள் மூலம் செய்திகளை மக்கள் மயப்படுத்தும் நடவடிக்கைகள் ஒலிபரப்புக் கூட்டுத்தாபன செய்திப் பிரிவினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள புதிய ஊடக அலகு, சமூக ஊடகங்களுடன் போட்டித்தன்மையைப் பராமரித்துச் செல்வதற்கு “சுபாரதீ”, “எதுல்பெத்த”, “சத்யக்ஷணய” போன்ற நிகழ்ச்சிகள் நிலவும் நடைமுறை நிகழ்வுகளுடன் தொடர்புடையதாக அரசின் அபிவிருத்தி நடவடிக்கைகளை மக்களிடையே கொண்டு செல்வதற்காக, குழப்பங்கள், முரண்பாடுகள், வாதப்பிரதிவாதங்களினூடாக சரியான பாதைக்குச் செல்லும் கருப்பொருளின் மூலம் செய்திப் பிரிவின் மூலமாக தயாரிக்கப்பட்டு ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகளாகும்.

- **அபிவிருத்திப் பிரிவு.**

அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் 01.01.2019 முதல் 31.12.2019 வரை கலந்து கொண்ட பல்வேறு நிகழ்வுகளுக்கு அபிவிருத்திப் பிரிவு ஊடக உள்ளடக்கத்தை வழங்கியுள்ளது. அந்த விழாக்களின் போது குடியரசுத் தலைவர் ஆற்றிய உரைகளை நெறியாள்கை செய்யும் பணியும் அபிவிருத்திப் பிரிவுக்கு உள்ளது. இந்த விழாக்கள் தொடர்பான பிரச்சாரத்திற்கு முந்தைய செயல்பாடுகளையும் அபிவிருத்தி பிரிவு மேற்கொண்டுள்ளது. ஜனாதிபதி கலந்து கொள்ளும் சிறப்பு வெளிநாட்டு விஜயங்கள் குறித்த விபர அறிக்கையும் அபிவிருத்தி பிரிவினால்மேற்கொள்ளப்படும். அதுபோன்றே அபிவிருத்திப் பிரிவு பிரதமர் பங்கேற்கும் உத்தியோகபூர்வ நிகழ்ச்சிகளின் ஊடக உள்ளடக்கத்தை மேற்கொள்ளல், அது தொடர்பான நிகழ்ச்சிகள் தயாரிப்பு மற்றும் ஒலிபரப்பினையும் மேற்கொள்ளும்.

- **இசைப் பிரிவு**

இசை நிகழ்ச்சிகளைத் தயாரித்தல், புதிய பாடல்களை உருவாக்குதல், இசை நிகழ்ச்சிகளுக்கு இசை வழங்குதல் மற்றும் இசைத் துறை தொடர்பான இசை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல் ஆகியவற்றுக்கு இசைப் பிரிவு பொறுப்பாகும். 2019 ஆம் ஆண்டில், இசைப் பிரிவு கூட்டுத்தாபனத்தின் ஒவ்வொரு அலைவரிசைக்கும் தனது பங்களிப்பைச் செய்துள்ளது. வட இந்திய ராகதாரி இசை இடம்பெறும் "சரச ராவய", விதுல சிறுவர் வானொலியில் உள்நாட்டு பாரம்பரிய நாட்டுப்புற பாடல்களை உள்ளடக்கி ஒலிபரப்பப்படும் "ஜனகீ" நிகழ்ச்சி, பாரம்பரிய நாட்டுப்புற பாடல்கள், நாட்டுப் புறப் பாடல்களின் மீள் உருவாக்கம் மற்றும் நாட்டுப் புறப் பாடல்களின் பாணியில் உருவாகிய "ஹெல கீ சித்தம்", எளிய பாடல் கலைஞர்களை ஈடுபடுத்தி தயாரிக்கப்பட்ட "சரள கீ" நிகழ்ச்சி,எளிமையான உலக இசைக்கான பல்வேறு பாடல்கள் மற்றும் இசைகள், இலங்கை பாரம்பரிய பாடல்கள் மற்றும் வட இந்திய ராகாதரி இசை, ஓபரா, சிம்பொனி மற்றும் மேற்கத்திய இசையின் பல்வேறு வகைகளில் இருந்து பாரம்பரிய எளிய பாரம்பரிய பாடல்கள் மற்றும் கருவிகள். "விஸ்வெயே விந்தனீய பிரதிராவ", "ஷ்ரதாஞ்சலி", கலாநிதி பிரணீத் அபேசுந்தர வளவாளராக இருந்து வழங்கும் "இரிதா சங்ரஹய", ஒரு கல்வி நிகழ்ச்சியாகிய "லலித கலாலய" தம்மபத பாடல்களுடன் உருவாக்கப்பட்ட "தம்மபத கீ" நிகழ்ச்சி ஆகியன இசைப் பிரிவினால் தயாரிக்கப்பட்டு ஒலிபரப்பப்படுகின்றன. மேலும், "வசந்த வீணா" "நாத சித்தம்" நிகழ்ச்சிகளும்தயாரிக்கப்பட்டுள்ளன.

- **வெளியீட்டுப் பிரிவு**

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் வெளியீடு, உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியவற்றுக்கு வெளியீட்டுப் பிரிவு பொறுப்பாகும். 2019 இல் புதிய வெளியீடுகள் எதுவும் தயாரிக்கப்படவில்லை, முன் தயாரிக்கப்பட்ட நிறுவன வெளியீடுகள் விற்கப்பட்டன.

கூட்டுத்தாபனம் பல்வேறு நிகழ்வுகளில் விற்பனையை நடத்தியதுடன்,இறுவட்டு மற்றும் குரல் இதழ்களையும் விற்பனை செய்துள்ளது, அவை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் விநியோக வலையமைப்பினூடாக சர்வதேச புத்தகக் கண்காட்சியில் வெளியிடப்பட்டன.

- **மத்திய செயல்பாட்டு பிரிவு.**

2019 ஆம் ஆண்டில், மத்திய செயல்பாட்டுப் பிரிவு ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அடைவதில் குறிப்பிடத்தக்க நிறுவனப் பங்கைக் கொண்டுள்ளது மற்றும் சிங்களம், தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, தெலுங்கு மற்றும் மலையாளத்தில் பதிவுசெய்தல், திருத்துதல், வெளிப்புறப் பதிவு மற்றும் நேரடி ஸ்ட்ரீமிங் நிகழ்ச்சிகளை செய்து வருகிறது. உயர்தர தரமான விளம்பரங்களை ஒலிபரப்ப உதவுவது மற்றும் தயாரிப்பது, அவர்களின்

விளம்பரங்களை மிகவும் திறமையான தினசரி முறையில் வெளியிடுவதற்கு உதவுதல், நிறுவனத்தின் அடையாளத்தை பராமரித்தல் மற்றும் தொழில்நுட்ப பணிக்கு பங்களித்தல் மற்றும் அதன் பிரிவுக்கு ஒதுக்கப்பட்ட மகத்தான பங்கை நிறைவேற்றுவது. நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள் இந்த பணிக்கு தொழில்நுட்ப ஆதரவை வழங்குகிறார்கள் மற்றும் அரங்க சேவை ஊழியர்கள் அரங்கங்களுக்கு தேவையான சேவை வசதிகளை வழங்குகிறார்கள்.

மத்திய செயல்பாட்டுப் பிரிவு, நிகழ்ச்சிகளைப் பதிவு செய்வதற்கும், சிறப்பு இசை மற்றும் கண்கவர் நிகழ்ச்சிகளைப் பதிவு செய்வதற்காக கூட்டுத்தாபனத்தன் அரங்கங்களை ஒதுக்குதல் மற்றும் நேரடி ஒலிபரப்பை மேற்கொள்வதற்கு அரங்கினைப் பராமரிப்பதற்குநிகழ்ச்சி நிரல்களைத் தயாரித்து அதன்படி நிகழ்ச்சி தயாரிப்பு உதவி பணி அமர்வு அட்டவணைகளைத் தயாரித்தல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்வதுடன் அரங்கு ஒதுக்கும் பணிக்காக பிரிதொரு பணியாளர் தொகுதியினை இப்பிரிவு சேவையில் ஈடுபடுத்தியுள்ளது.

கேட்போருக்கு தரமான நிகழ்ச்சிகளை வழங்கும் பொறுப்பான மத்திய செயல்பாட்டுப் பிரிவு, ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் அனைத்துப் பிரிவுகளுக்கும் அதன் தொடக்கத்திலிருந்தே நன்கு ஒத்துழைத்து வருகிறது மற்றும் 2019 ஆம் ஆண்டிலும் தனது பொறுப்புகளை சிறப்பாகச் செய்து வருகிறது.

மத்திய செயல்பாட்டு தயாரிப்பு உதவியாளர் மலிந்த தேசப்பிரிய, 2019 வானொலிகளுக்கானஅரச விருது வழங்கல் விழாவில் சிறந்த தொனி கற்பித்தலுக்கான விருதைப் பெற்றார்.

- **ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் வெளிநாட்டு உறவுகள் பிரிவு.**

ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் வெளி உறவுகள் பிரிவின் கடமைகள், வெளிப் பயிற்சியாளர்களுக்கும், உள்ளகத் தேவைகளுக்கும் பயிற்சி வாய்ப்புகளை வழங்குவதும், வானொலி ஆராய்ச்சியை மேற்கொள்வதும், வெளிநாட்டு உறவுகளை முறையாக நிர்வகிப்பதும் ஆகும்.

- **செவிப்புலன் ஆராய்ச்சி பிரிவு**

செவிப்புலன் தரம் மற்றும் நேயர் சமூகம் ஆகியன தொடர்பாக ஆராய்ச்சி செய்து அதற்குப் பொருத்தமான தீர்வுகளை முன்மொழிதல்செவிப்புலன் ஆராய்ச்சிப் பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பாகும். அதன்படி, 2019 இல் தேசிய சேவைகள்,தேசிய சேவைகளின் செவிப்புலன் தரம் குறித்த நேயர் கருத்து மற்றும் உள்நாட்டு சேவைகள் குறித்த நிகழ்ச்சிகளுக்கு பார்வையாளர்களின் பதில்கள் மூலம் பார்வையாளர்களின் திருப்தியை அடையாளம் காண கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. 2019 ஆம் ஆண்டில்,செவிப்புலன் ஆராய்ச்சிப் பிரிவு நிகழ்ச்சிகளுக்கு தினசரி அடிப்படையில் முக்கிய தகவல்களை வழங்குதல், வானொலியில் தகவல்களை ஆராயும் அறிஞர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்குத் தகவல் வழங்குதல் மற்றும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் கையேட்டினை இற்றைப்படுத்திப் பராமரித்தல் ஆகியன செவிப்புலன் ஆராய்ச்சி பிரிவினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- **பயிற்சிப் பிரிவு**

வானொலி உற்பத்தி மற்றும் தகவல் தொடர்பு சான்றிதழ் காலாண்டு பாடநெறிகள், இரண்டு குழுக்களுக்காகவும் களனி பல்கலைக்கழகத்தின் இரண்டு மாணவர்களுக்கு 03 மாத நிறுவன பயிற்சி மற்றும் 2019 ஆம் ஆண்டில் வெளிக்களப் பயிற்சியாளர்களுக்கான பயிற்சிச் செயலமர்வுகளும் நடாத்தப்பட்டன.

அதற்கு மேலதிகமாக, வானொலி நிகழ்ச்சி மாதிரிகள் குறித்த ஒரு நாள் செயலமர்வு,சாரதியினருக்கு நேர்மறை சிந்தனை தொடர்பான இரண்டு நாள் செயலமர்வு, அலுவலக உதவியாளர்கள், ஸ்டுடியோ உதவியாளர்களுக்கு ஒரு நாள் செயலமர்வு,முகாமைத்துவ உதவியாளர்களுக்கு அலுவலக முகாமைத்துவம் மற்றும் நிதி ஒழுங்குமுறை குறித்த ஒரு நாள் செயலமர்வு, 07 நாட்கள் தட்டச்சுப் பயிற்சி,விளையாட்டு வர்ணனை நடைமுறைப் பயிற்சி, பெறுகை வழிகாட்டல்கள் ஒழுங்குமுறைகள் மற்றும் திட்டமிடல் தொடர்பான 03 நாள் செயலமர்வு, நிருவாகப் பிரிவுப் பணியாளர்களுக்கான 7 நாள் கணினி பயிற்சி, ஆட்சேர்ப்பு நடைமுறை குறித்த 03 நாள் செயலமர்வு, ஆங்கில .ப்ரீலான்ஸ் அறிவிப்பாளர் பயிற்சி (05 நாட்கள்), தாபனவிதிக் கோவை தொடர்பான இரண்டு நாள் செயலமர்வு ஆகியன 2019 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட பயிற்சி பட்டறைகள் ஆகும்.

சிங்கப்பூரில் பொறியியல் பிரிவின் 04 அதிகாரிகளுக்கான 03 நாள் பட்டறைக்கான பரிந்துரையும் 2019 ஆம் ஆண்டில் பயிற்சி மற்றும் வெளி உறவுகள் பிரிவால் செய்யப்பட்டது.

பொறியியல் பிரிவு

2019 ஆண்டில் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பொறியியல் பிரிவினால் செய்யப்பட்ட பணிகள்

- ✓ கொழும்பு மற்றும் யட்டியந்தோட்டை ஒலிபரப்பு நிலையங்களுக்கான 09 Audio Processors நிறுவல்,திட்டத்தின் பெறுமதி 12.1 மில்லியன் ரூபாய்களாகும்.
- ✓ தலைமை அலுவலகத்திற்கான மின்னல் கடத்தி அமைப்பை நிறுவுதல்.

  திட்டத்தின் பெறுமதி16.8 மில்லியன் ரூபாய்களாகும்.
- ✓ தலைமை அலுவலகத்திற்கு ஒரு பாதுகாப்பு கேமரா அமைப்பை நிறுவுதல்.

  திட்டத்தின் பெறுமதி3.2 மில்லியன் ரூபாய்களாகும்.
- ✓ தயாரிப்பு அரங்குகளுக்கான யுபிஎஸ் அமைப்பை நிறுவுதல்.
  திட்டத்தின் பெறுமதி3.5 மில்லியன் ரூபாய்களாகும்.

சந்தைப்படுத்தல் பிரிவு

2019 இல் விற்பனை ஊக்குவிப்பு திட்டங்கள்

- ✓ இந்தி பாடல்களைப் பாடுவதில் திறமையான பயிலுநர்களுக்கானஒரு தளத்தை வழங்கி சிங்கள வர்த்தக சேவை மூலமாக ரியலிடி நிகழ்ச்சியாக “த பொலிவுட் ஷோ” ஒலிபரப்பப்பட்டதுடன் இதுசேவையில் மிகவும் பிரபலமான நிகழ்ச்சியாக இருந்தது.
- ✓ பாடல்களைப் பாடுவதில் திறமையான பாடகர்களின் பங்கேற்புடன் மாதாந்த வானொலி ரியாலிட்டி நிகழ்ச்சியாக, “சொந்துறு சியொத்துன்” என்ற தொடர் இசை நிகழ்ச்சிகள் எ.ப் சேவையில் ஒலிபரப்பப்பட்டது.
- ✓ பாடசாலை மாணவர்களின் பாரம்பரிய இசையின் இரசனையை விரிவுபடுத்தும் நோக்கில், “மிஹிர மனரம்” என்ற தொடர் நிகழ்ச்சிகள் பாடசாலை, வானொலி இசைக்குழுக்கள் மற்றும் சிரேஷ்ட பாடகர்களின் பங்கேற்புடன் ஒலிபரப்பப்பட்டது.

கணக்குக் கூற்று - 2019

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

நிதி நிலைமைக் கூற்று

(அனைத்துத் தொகைகளும் இலங்கை ரூபாய்களில் உள்ளன)

	குறிப்பு	2019 டிசம்பர் 31	2018 டிசம்பர் 31
சொத்துக்கள்			
நடைமுறை அல்லாத சொத்துக்கள்			
ஆதனம், ஆலை மறடறும் உபகரணங்கள்	**9**	2,162,736,211	2,311,430,062
பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள்	**8**	11,555,647	8,970,648
மென்பொருள்	**9**	10,745,170	2,977,263
மூலதன நடைமுறை வேலை	**10**	17,032,793	21,389,180
நிலையான வைப்புக்கள்		77,023,784	69,818,185
முதலீடு	**11**	1,000,000	1,000,000
		2,280,093,604	**2,415,585,336**
நடைமுறைச் சொத்துக்கள்			
சரக்கிருப்புகள்	**12**	20,025,662	47,118,087
வியாபார மற்றும் ஏனைய பெறுவனவுகள்	**13**	235,393,552	247,924,946
காசு மற்றும் காசையொத்தவை	**14**	116,175,232	161,820,848
		371,594,446	**456,863,880**
மொத்த சொத்துக்கள்		**2,651,688,050**	**2,872,449,215**
உரிமையாண்மையும் பொறுப்புக்களும்			
மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள்			
கூறப்பட்ட மூலதனம்		307,386,085	307,386,085
மீள்மதிப்பீட்டு ஒதுக்கங்கள்		11,971,999	11,971,999
நிறுத்திவைத்த வருவாய்	**15**	(203,004,112)	(98,140,157)
		116,353,972	**221,217,928**
எதிர்பாராப் பொறுப்புக்கள்		11,783,507	11,783,507
நடைமுறை அல்லாத பொறுப்புக்கள்			
வரையறுக்கப்பட்ட நன்மைக் கடமைப்பாடுகள்	**20**	232,428,448	197,804,973
வெளிநாட்டு மானியம்	**19**	857,697,784	1,064,823,598
அரச மானியம்		827,690,965	805,199,976
ஏனைய கொடுப்பனவுகள்	**18**	8,551,384	13,403,384
பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்கள்	**8**	131,349,681	109,840,670
		2,057,718,262	**2,191,072,602**
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வரையறுக்கப்பட்ட நன்மைக் கடமைப்பாடுகள	**20**		2,517,832
வியாபார மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்	**16**	358,002,646	323,372,573
நிதி அல்லாத பொறுப்புக்கள்	**17**	107,829,664	122,484,772
மொத்த பொறுப்புக்கள்		**465,832,310**	**448,375,177**
மொத்த உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள்		**2,651,688,050**	**2,872,449,215**

நிதி அறிக்கைகள் இலங்கை நிதி அறிக்கையிடல் தராதரங்கள், 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்கநிதி சட்டம். 1966 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன சட்டம், ஆகியவவற்றின் தேவைகளுக்கு இணங்க,
தயாரிக்கப்பட்டுள்ளன என்று நிதிப் பணிப்பாளர் உறுதிப்படுத்துகின்றார்.

திரு. லலித் ஹெட்டிகே
நிதிப் பணிப்பாளர்

திகதி.10/03/2020

இந்நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதும் சமர்ப்பிப்பதும் பணிப்பாளர் சபையினது பொறுப்பாகும். இந்நிதிக் கூற்றுக்கள்

தலைவர்
Date:.....

பணிப்பாளர் சபை உறுப்பினர்
திகதி:.....08/07/2020.....

பணிப்பாளர் சபை உறுப்பின
திகதி:.....

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

விரிவான வருமானக் கூற்று

அனைத்துத் தொகைகளும் இலங்கை ரூபாய்களில் உள்ளன

	குறிப்பு	2019 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டு	2018 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டு
விற்பனைகள்	1	**659,857,071**	658,556,215
விற்பனைக் கிரயம்	2	**644,632,855**	630,013,674
மொத்த இலாபம்		**15,224,215**	**28,542,541**
ஏனைய செயற்பாட்டு வருமானம்	3	**350,298,093**	**328,401,681**
விநியோகச் செலவுகள்	4	**-**	**2,231,926**
ஏனைய செயற்பாட்டுச் செலவுகள்	5	**359,430,850**	**348,330,839**
நிருவாகச் செலவுகள்	6	**396,388,501**	**386,726,869**
செயற்பாட்டு இலாபம்		**(390,297,043)**	**(380,345,412)**
நிதிக் கிரயங்கள்	7	**4,073,406**	**2,972,696**
அரச மானியத்திற்கு முன்னரான இலாபம்/ (நட்டம்)		**(394,370,449)**	**(383,318,108)**
அரச மானியம்	3.1	**365,000,000**	**360,000,000**
இலாபம்/ (நட்டம்)		**(29,370,449)**	**(23,318,108)**
பிற்போடப்பட்ட வரி	8	**(18,924,012)**	**(28,005,270)**
ஏனைய விரிவான வருமானம்	20	**(56,569,495)**	**8,653,266**
வரிக்குப் பின்னரான இலாபம்		**(104,863,956)**	**(42,670,112)**
மொத்த விரிவான வருமானம்		**(104,863,956)**	**(42,670,112)**

இலங்கை ஒலிப்பரப்புக் கூட்டுத்தாபனம்

உரிமையாண்மை மாற்றக் கூற்று

(அனைத்துத் தொகைகளும் இலங்கை ரூபாய்களில் உள்ளன)

	கூறப்பட்ட மூலதனம்	மீள்மதிப்பீட்டு ஒதுக்கங்கள்	நிறுத்திவைத்த வருவாய்கள்	மொத்தம்
2019 சனவரி 1 ஆம் திகதி மீதி	307,386,085	11,971,999	-	319,358,084
விரிவான வருமானம்				
வருமான ஒதுக்கம்			(42,670,112)	(42,670,112)
வருமான ஒதுக்கம்			(55,470,045)	(55,470,045)
2019 டிசம்பர் 31 ஆம் திகதி மீதி	**307,386,085**	**11,971,999**	**(98,140,157)**	**221,217,928**
மூலதன ஒதுக்கம்				-
விரிவான வருமானம்				
காலப்பகுதிக்கான விரிவான வருமானம்			(104,863,956)	(104,863,956)
வருமான ஒதுக்கம்				-
2019 டிசம்பர் 31 ஆம் திகதி மீதி	**307,386,085**	**11,971,999**	**(203,004,112)**	**116,353,972**

2019 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று

விவரம்	2019		**2018**	
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்				
வட்டி மற்றும் வரிக்கு முன்னரான தேறிய இலாபம்		(29,370,449)		(20,127,590)
சீராக்கங்கள்				
அரச மானியத்தின் கடன்தீர்ப்பனவு	(107,878,577)		(86,531,268)	
திருகோணமலை மானியத்தின் கடன்தீர்ப்பனவு	(155,406,674)		(155,406,674)	
தேய்மானம்	97,492,400		78,900,888	
தேய்மானம் - திருகோணமலை	161,224,994		159,846,172	
மென்பொருள் கடன்தீர்ப்பனவு	2,913,028		830,250	
பணிக்கொடைக்கான ஒதுக்கம்	30,471,666		31,435,470	
அறவிட முடியாக் கடன் ஒதுக்கம்	(1,958,535)		2,231,926	
சொத்து அகற்றல்	(1,230,370)			
பரிமாற்ற ஆதாயம்/ (நட்டம்)	(81,301)		(803,628)	
பொருளாதாரச் சேவை விதிப்பனவு	3,669,880	29,216,510	3,769,850	34,272,984
		(153,939)		14,145,394
வருமான ஒதுக்கச் சீராக்கம்				(207,000)
செயற்படு மூலதனத்திற்கு முன்னரான செயற்பாட்டு இலாபம்				
சரக்கிருப்பில் அதிகரிப்பு/ குறைவு	27,092,425		(1,999,520)	
வட்டி மற்றும் ஏனைய பெறுவனவுகளில் அதிகரிப்பு/ குறைவு	14,489,929		(6,261,324)	
டிரான்ஸிட்டிலுள்ள அதிகரிப்பு/ குறைவு			(108,923)	
வியாபார மற்றும் ஏனைய பெறுவனவுகளில் அதிகரிப்பு/ குறைவு	(29,778,073)		56,365,560	
நிதி அல்லாத பொறுப்புக்களில் அதிகரிப்பு/ குறைவு	(14,564,709)	56,795,717	(20,429,685)	27,566,108
		12,363,024		
செலுத்தப்பட்ட பணிக்கொடை		(54,935,519)		(49,736,515)
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்				(8,232,013)
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்				
நிலையான வைப்பு வட்டி	(7,205,599)		(6,449,587)	
அரச மானியம்	126,000,000		19,672,630	
சொத்து அகற்றல்	7,352,777			
ஆதனம், ஆலை மற்றும் உபகரணங்களின் கொள்வனவு	(162,910,503)		(70,790,307)	
மூலதன நடைமுறை வேலை	(3,235,774)		(60,730,197)	
முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு		(47,351,876)		(118,297,461)
தேறிய காசு மற்றும் காசையொத்தவைகளில் அதிகரிப்பு/ குறைவு		(45,645,616)		(126,529,474)
மீளாய்வாண்டில் ஆரம்பத்திலிருந்த காசு மற்றும் காசையொத்தவைகள்		161,820,848		288,350,322
மீளாய்வாண்டில் இறுதியிலிருந்த காசு மற்றும் காசையொத்தவைகள் (குறிப்பு 14)		**116,175,232**		**161,820,848**

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

1. பொது தகவல்கள்

1.1 அறிக்கையிடல் நிறுவனம்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், 1966 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் முறையாகக் கூட்டிணைக்கப்பட்டு நிறுவப்பட்டது, அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் கொழும்பு 07 இன் சுதந்திர சதுக்கத்தில் உள்ளதுடன் வணிகத்தின் முக்கிய இடமும் கொழும்பு 07 இன் சுதந்திர சதுக்கத்தில் அமைந்துள்ளது.

1.2 முதன்மை செயல்பாடுகள் மற்றும் செயல்பாடுகளின் தன்மை

மீளாய்வாண்டின் போது, கூட்டுத்தாபனத்தின் முக்கிய செயல்பாடு ஒலிபரப்பு விற்பனை ஆகும்.

1.3 வெளியீட்டுக்கான அங்கீகார தேதி

2019 டிசம்பர் 31 உடன் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நிதிநிலை அறிக்கைகள் ஒப்புதலுக்காக 2020 யூன் 17 ஆம் திகதி வழங்கப்பட்டன

1.4 ஊழியர்களின் எண்ணிக்கை

இந்த ஆண்டின் இறுதியில் நிரந்தர ஊழியர்களின் எண்ணிக்கை 710 ஆகும் மேலும் ஆண்டின் இறுதியில் ஒப்பந்த ஊழியர்களின் எண்ணிக்கை 81 ஆகும் (31.12.2018 - 847)

2. இலங்கை நிதி அறிக்கையில் தராதரங்களை (“எஸ்.எல்.எ.ஃப்.ஆர்.எஸ் ”) தயாரித்தல் மற்றும் ஏற்றுக்கொள்ளல்

இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனம் மற்றும் 1995 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலங்கை கணக்கியல் மற்றும் கணக்காய்வு தர நிர்ணயச் சட்டத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை கணக்கீட்டுத் தராதரங்களின்படி (“எஸ்.எல்.எ.ஃப்.ஆர்.எஸ்”) படி கூட்டுத்தாபனம் தனது நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கிறது.

இலங்கையின் பட்டய கணக்காளர் நிறுவனம் இலங்கை கணக்கியல் தராதரங்களின் (“எஸ்.எல்.எ.ஃப்.ஆர்.எஸ்”) ஒரு புதிய தொகுதியை வெளியிட்டதுடன் நிறுவனங்கள் இந்த தரங்களை 2012 ஜனவரி 1 முதல் அல்லது அதற்குப் பிறகு நடைமுறைப்படுத்த வேண்டும்.

3.1 குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம்

இந்த நிதிநிலை அறிக்கைகள் தயாரிப்பதில் பயன்படுத்தப்படும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. வேறுவிதமாகக் கூறப்படாவிட்டால், இந்த கொள்கைகள் வழங்கப்பட்ட அனைத்து ஆண்டுகளுக்கும் தொடர்ந்து பயன்படுத்தப்படுகின்றன.

3.1.1 தயாரிப்பின் அடிப்படை

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுக்கள் இலங்கை நிதி அறிக்கை தரநிலைகளுக்கு (சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான எஸ்.எல்.எ.ஃ.ப்.ஆர்.எஸ்) ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளன. நிதிக் கூற்றுக்கள் வரலாற்றுக் கிரயம் மற்றும் பிற குறிப்பிட்ட அளவீடுகளின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளன, அவை அடுத்தடுத்த குறிப்புகளில் விளக்கப்பட்டுள்ளன.

நிதி அறிக்கைகளை பாதிக்கும் பணவீக்க காரணிகளில் எந்த மாற்றங்களும் செய்யப்படவில்லை.

எஸ்.எல்.எ.ஃ.ப்.ஆர்.எஸ் உடன் இணக்கமாக நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பதற்கு முக்கியமான கணக்கியல் மதிப்பீடுகளைப் பயன்படுத்த வேண்டும். கூட்டுத்தாபனத்தின் கணக்கியல் கொள்கைகளைப் பயன்படுத்துவதற்கான செயல்பாட்டில் நிர்வாகம் தனது தீர்ப்பைப் பயன்படுத்த வேண்டும். நிதிக் கூற்றுக்களுக்கு அனுமானங்களும் மதிப்பீடுகளும் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள் குறிப்பு 4 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. நிதிக் கூற்றுக்களின் தேதியில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் மற்றும் தொடர்ச்சியான சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை வெளிப்படுத்துதல் மற்றும் வருவாய் மற்றும் செலவுகளின் அளவு அறிக்கை அறிக்கை காலம என்பன வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இந்த மதிப்பீடுகள் தற்போதைய நிகழ்வுகள் மற்றும் செயல்களைப் பற்றிய நிர்வாகத்தின் சிறந்த அறிவை அடிப்படையாகக் கொண்டவை என்றாலும், உண்மையான முடிவுகள் இறுதியில் அந்த மதிப்பீடுகளிலிருந்து வேறுபடலாம்.

3.1.2 தொடர்ந்து செல்லல்

பணிப்பாளர்கள் கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்து செல்லும் இயலுமை பற்றிய மதிப்பீடொன்றை மேற்கொண்டதுடன் அவர்கள் நிறுவனத்தைக் கலைக்கவோ வியாபாரத்தை நிறுத்தவோ உத்தேசிக்கவில்லை.

3.1.3 ஐந்தொகைக்குப் பின்னரான நிகழ்வுகள்

இருப்புநிலை தேதிக்குப் பிறகு நிகழும் அனைத்து முக்கிய நிகழ்வுகளும் பரிசீலிக்கப்பட்டு, நிதிநிலை அறிக்கைகளில் தேவையான மாற்றங்கள மேற்கொள்ளப்பட்டு / அல்லது வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

3.1.4 ஒப்பீட்டு தகவல்

கூட்டுத்தாபனத்தால் தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்படும் கணக்கியல் கொள்கைகள், வேறுவிதமாகக் கூறப்படாவிட்டால், முந்தைய ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டவற்றுடன் ஒத்துப்போகின்றன. சமர்ப்பித்தலை உறுதிப்படுத்த முந்தைய ஆண்டின் புள்ளிவிவரங்கள் மற்றும் கட்டங்கள் மறுசீரமைக்கப்பட்டுள்ளன.

3.1.5 வெளிநாட்டு நாணயங்கள்

(அ) செயல்பாட்டு மற்றும் சமர்ப்பித்தல் நாணயம்

கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுக்களில் சேர்க்கப்பட்டுள்ள உருப்படிகள் நிறுவனம் செயல்படும் முதன்மை பொருளாதார சூழலின் நாணயத்தைப் பயன்படுத்தி அளவிடப்படுகின்றன (”செயல்பாட்டு நாணயம்”). நிதி அறிக்கைகள் இலங்கை ரூபாயில் வழங்கப்படுகின்றன, இது கூட்டுத்தாபனத்தின் செயல்பாட்டு மற்றும் சமர்ப்பித்தல் நாணயமாகும்.

(ஆ) வெளிநாட்டு நாணய பரிவர்த்தனைகள் மற்றும் நிலுவைகள்

பரிவர்த்தனைகளின் திகதிகள் அல்லது மதிப்பீடுகள் மதிப்பிடப்பட்ட திகதிகளில் நிலவும் மாற்று விகிதங்களைப் பயன்படுத்தி வெளிநாட்டு நாணய பரிவர்த்தனைகள் செயல்பாட்டு நாணயத்திற்கு மாற்றப்படுகின்றன. அத்தகைய பரிவர்த்தனைகளின் தீர்வு மற்றும் வெளிநாட்டு நாணயங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நாணய சொத்துக்கள் மற்றும் கடன்களின் ஆண்டு இறுதி பரிமாற்ற வீதங்களின் மாற்றத்தின் விளைவாக ஏற்படும் அந்நிய செலாவணி ஆதாயங்கள் மற்றும் இழப்புகள் வருமானக் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

3.2 பிற குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள்

3.2.1 சொத்துக்கள் மற்றும் அடிப்படைகள் அவற்றின் மதிப்பீட்டில்

ஐந்தொகையில் தற்போதைய சொத்துகளாக வகைப்படுத்தப்பட்ட சொத்துகள் ரொக்கமாகவும், கூட்டுத்தாபனத்தின் வணிகத்தின் இயல்பான இயக்க சுழற்சியின் போது அல்லது இருப்புநிலை திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள், எது குறைவாக இருந்தாலும் பணமாக உணரப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நடைமுறைச் சொத்துக்களைத் தவிர மற்ற சொத்துக்களை இருப்புநிலை திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்கு அப்பால் வைத்திருக்க கூட்டுத்தாபனம் விரும்புகிறது.

3.2.1.1 பொறி, ஆலை மற்றும் உபகரணங்கள்

நிலம் மற்றும் கட்டிடங்கள் முக்கியமாக தலைமை அலுவலகம், பிராந்திய மற்றும் ஒலிபரப்பு நிலையம் ஆகியவற்றைக் கொண்டுள்ளன. அனைத்து சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள் வரலாற்றுக் கிரய அடிப்படையில் கூறப்பட்டுள்ளன. பொறி, ஆலை மற்றும் உபகரணங்களின் கிரயம் என்பது சொத்துக்களை அதன் பணி நிலைமைகளுக்கு கட்டுப்படுத்துவதில் ஏற்படும் எந்தவொரு தற்செயலான செலவினங்களுடனும் பயன்படுத்த விரும்பும் தேவைக்காக அதனைக் கொள்வனவு செய்வதற்கான கிரயம் ஆகும். சொத்துக்களை அதன் நிரந்தர தன்மையில் பெறுதல், விரிவாக்குதல் அல்லது மேம்படுத்துதல் ஆகியவற்றுக்கான செலவினங்கள் மூலதனச் செலவாகக் கருதப்படுகின்றன. அடுத்தடுத்த செலவுகள் சொத்தின் சுமந்து செல்லும் தொகையில் சேர்க்கப்படுதல் அல்லது சொத்துடன் தொடர்புடைய எதிர்கால பொருளாதார நன்மைகள் கூட்டுத்தாபனத்திற்குப் பாயும் மற்றும் பொருளின் விலையை நம்பத்தகுந்த முறையில் அளவிட முடியும் என்ற பட்சத்தில் மாத்திரம் ஒரு தனி சொத்தாக அங்கீகரிக்கப்படுவது பொருத்தமானதாகும்.

3.2.1.2 மறுசீரமைப்பு செலவுகள்

முதலில் மதிப்பிடப்பட்ட செயல்திறனில் இருந்து எதிர்பார்க்கப்படும் எதிர்கால பொருளாதார நன்மைகளை மீட்டெடுப்பதற்காக அல்லது பராமரிப்பதற்காக ஆதனம், ஆலை மற்றும் உபகரணங்களை பழுதுபார்ப்பது அல்லது பராமரிப்பதில் ஏற்படும் செலவு, ஏற்படும் போது ஒரு செலவாக அங்கீகரிக்கப்படுகிறது.

3.2.1.3 தேய்மானம்

நிலம் தேய்மானம் செய்யப்படவில்லை. அனைத்து நிலையான சொத்துகளின் விலை / மதிப்பிடப்பட்ட அளவுகளில் ஒரு நேர் கோட்டு முறையைப் பயன்படுத்துவதன் மூலம் பிற சொத்துக்களுக்கான தேய்மானத்திற்கான ஏற்பாடுகள் கணக்கிடப்படுகின்றன. இந்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும் முதன்மை வருடாந்த விகிதங்கள் பின்வருமாறு:

கட்டடங்கள்	2.5%
பொறியும் இயந்திரமும்	7.5%
ஆடியோ அதிரவெண் உபகரணம்	7.5%
தளபாடங்கள், பொருத்திகள் மற்றும் உபகரணங்கள்	10%
டிரான்ஸ்மிட்டர்	7.5%
மோட்டார் வாகனங்கள்	25%
சங்கீத உபகரணங்கள்	10%
கணினி உபகரணங்கள்	50%
ஒலிப்பதிவு நாடாக்கள்	33.33%
தளர்வு உபகரணங்கள்	50%
மென்பொருள்	50%

ஒவ்வொரு அறிக்கையிடல் காலத்தின் முடிவிலும், சொத்தின் எஞ்சிய மதிப்புகள் மற்றும் பயனுள்ள ஆயுட்காலம் மதிப்பாய்வு செய்யப்பட்டு, பொருத்தமாக இருந்தால் சரிசெய்யப்படும்.

சொத்தின் சுமந்து செல்லும் தொகை அதன் மதிப்பிடப்பட்ட மீளக்கூடிய தொகையை விட அதிகமாக இருந்தால், ஒரு சொத்தின் சுமந்து செல்லும் தொகை உடனடியாக அதன் மீட்கக்கூடிய தொகைக்கு எழுதப்படும்.

ஆதனம், ஆலை மற்றும் உபகரணங்களை அகற்றுவதில் கிடைக்கும் இலாபங்கள் மற்றும் நட்டங்கள் அவற்றின் சுமந்து செல்லும் தொகையைக் குறிப்பதன் மூலம் தீர்மானிக்கப்படுகின்றன மற்றும் செயற்பாட்டு இலாபத்தை நிர்ணயிப்பதில் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. மதிப்பிடப்பட்ட சொத்துக்கள் விற்கப்படும் போது, பிற இருப்புக்களில் சேர்க்கப்பட்ட தொகைகள் தக்க வருவாய்க்கு மாற்றப்படும்.

3.2.2 மூலதன வேலை முன்னேற்றம்

மூலதன வேலை முன்னேற்றம் என்பது பொருட்களின் திரட்டப்பட்ட செலவு மற்றும் ஒரு சொத்தின் கட்டுமானத்துடன் நேரடியாக தொடர்புடைய பிற செலவுகளைக் குறிக்கிறது. மூலதன பணிகள் முன்னேற்றம் என்பது கணிசமாக நிறைவடைந்த நேரத்தில் அந்தந்த சொத்து கணக்குகளுக்கு மாற்றப்படும் மற்றும் அதன் நோக்கம் பயன்படுத்த தயாராக உள்ளது.

3.2.3 நிதி சொத்துக்கள்

3.2.3.1. வகைப்பாடு

3.2.3.2 கடன்கள் மற்றும் பெறத்தக்கவை

கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் செயலில் உள்ள சந்தையில் மேற்கோள் காட்டப்படாத நிலையான அல்லது தீர்மானிக்கக்கூடிய கொடுப்பனவுகளுடன் வழித்தோன்றல் அல்லாத நிதிச் சொத்துகளாகும். அறிக்கையிடல் காலம் முடிவடைந்த 12 மாதங்களுக்கும் மேலான முதிர்வுகளைத் தவிர, அவை தற்போதைய சொத்துகளில் சேர்க்கப்பட்டுள்ளன. இவை நடப்பு அல்லாத சொத்துகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. கூட்டுத்தாபனத்தின் கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகளில் நிதி நிலை அறிக்கையில் 'வர்த்தகம் மற்றும் பிற பெறத்தக்கவை' மற்றும் 'காசு மற்றும் காசுக்குச் சமமானவை' ஆகியவை அடங்கும். (குறிப்புகள் 13 மற்றும் 14).

3.2.5.4. அங்கீகாரம் மற்றும் அளவீடு

இலாபம் அல்லது நட்டம் மூலம் நியாயமான மதிப்பில் கொண்டு செல்லப்படும் நிதி சொத்துக்கள் ஆரம்பத்தில் நியாயமான மதிப்பில் அங்கீகரிக்கப்படுகின்றன, மேலும் பரிவர்த்தனை செலவுகள் வருமானக் கூற்றில் செலவிடப்படுகின்றன. முதலீடுகளிலிருந்து பணப்புழக்கங்களைப் பெறுவதற்கான உரிமைகள் காலாவதியாகிவிட்டால் அல்லது உரிமையின் அனைத்து அபாயங்கள் மற்றும் வெகுமதிகளை கணிசமாக மாற்றும்போது நிதி சொத்துக்கள் அடையாளம் காணப்படுகின்றன. விற்பனைக்கு கிடைக்கும் நிதி சொத்துக்கள் மற்றும் நிதி சொத்துக்கள் இலாபம் அல்லது நட்டம் மூலம் பின்னர் நியாயமான மதிப்பில் கொண்டு செல்லப்படுகின்றன. கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் பின்னர் பயனுள்ள வட்டி முறையைப் பயன்படுத்தி கடன்தீர் நிதிச் செலவில் கொண்டு செல்லப்படுகின்றன.

இலங்கை வங்கி - டொரிங்டன் பிரதான கணக்கு	-	24,002,549		24,002,549
ஸ்டேட் பேங்க் ஒப் இந்தியா	451,172	465,140		465,140
டீயமெ ழக ஊநலடழடெ - யுரெசயனாயிரசய	15,000	0		
இலங்கை வங்கி - கண்டி	982,672	261,637		261,637
நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி	3,244,526	3,570,403		3,570,403
இலங்கை வங்கி - டொரிங்டன் வானொலி உரிமம்	1,612,591	1,421,286		1,421,286
இலங்கை வங்கி - டொரிங்டன் FM செயற்றிட்டம்	-	0		
காசு மீள்நிரப்பல்	189,920	60,395		60,395
இலங்கை வங்கி - டொரிங்டன் கெஸட் விற்பனை	-	1,313,320		1,313,320
இலங்கை வங்கி - மெட்ராஸ்	1,768,243	1,768,243		1,768,243
இலங்கை வங்கி - திருகோணமலை செயற்றிட்டம்	31,203,239	23,408,205		23,408,205
இலங்கை வங்கி - யாழ்ப்பாணக் கிளை	291,400	0		
இலங்கை வங்கி - சேமிப்பு	104,044	100,171		100,171
விளிம்புக் கணக்கு (மக்கள் வங்கி)		105,302,563		105,302,563
சேமிப்புக் கணக்கு (மக்கள் வங்கி)	75,989,614			
மொத்தம்	**116,175,232**	**161,820,848**	**-**	**161,820,848**
வ.மு. ப. மீதி (கணக்கிலக்கம்:265 & 339)	**(36,925,978)**			
காசுப் பாய்ச்சல் கூற்றிற்கான மீதி	**79,249,255**			

குறிப்பு 15,

தக்கவைத்த வருவாய்கள்

விவரம்	2019	2018
ஆரம்ப மீதி	**(98,140,157)**	**(55,337,285)**
(+) சீராக்கம்	3,558,293	**44,797,895**
(-) சீராக்கம்	(367,774)	**(25,521,014)**
விரிவான வருமானம்	**(104,863,956)**	**(42,670,112)**
	(3,190,519)	**(19,409,641)**
மொத்தம்	**(203,004,112)**	**(98,140,157)**

குறிப்பு 16,

வர்த்தக மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவை

விவரம்	2019	2018 சீராக்கியது	சீராக்கம்	2018 அங்கீகரித்து
ஒலிபரப்பு விற்பனை கடன்கொடுத்தோர்	14,601,069	12,419,431		12,419,431
திருப்பிச் செலுத்தக் கூடிய நானாவித வைப்புக்கள்	6,303,983	5,461,355		5,461,355
அட்டுறுச் செலவுகள்	282,771,870	279,206,565	455,000	278,751,565
ஊ. சே. நி	4,232,117	4,367,398		4,367,398
நானாவிதக் கடன்கொடுத்தோர்	12,215,702	13,967,873		13,967,873
பிரதேச வாரியான நடைமுறைக் கணக்கு	346,800	0		
ME இனது பாதுகாப்பு வைப்பு	205,621	377,886		377,886
சென்சும - சுனாமி	15,053	15,053		15,053
இலங்கை வங்கி - டொரிங்டன் பிரதான கணக்கு	36,746,227	0		
இலங்கை வங்கி - டொரிங்டன் கெஸட் விற்பனை	179,751	0		
கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு	-	6,942,341		6,942,341
ரஜரட விடுமுறை இல்லம்	384,454	614,671		614,671
	358,002,646	**323,372,573**	**455,000**	**322,917,573**

குறிப்பு 17

நிதி அல்லாத பொறுப்புக்கள்

விவரம்	2019	2018 சீராக்கியது	சீராக்கம்	2018 அங்கீகரித்து
என் எஸ் எல்	15,007,806	15,007,806		15,007,806
நாட்டைப் பாதுகாத்தல் நிதி	(12,418)	(12,418)		(12,418)
Payee வரி	100,466	76,852		76,852
நிறுத்தி வைத்தல் வரி	887,295	235,206		235,206
நேர் பெறுமதி வரி கட்டுப்பாட்டுக் கணக்கு	29,407,981	35,963,066		35,963,066
ESC	53,569,469	52,628,995		52,628,995
NBT	8,112,546	17,889,571		17,889,571
தேசிய பாதுகாப்பு நிதி	2,835	2,835		2,835
வருமான வரிக்கான ஏற்பாடு	692,759	692,759		692,759
உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டிய முத்திரைத் தீர்வை	60,925	100		100
	107,829,664	**122,484,772**	**0**	**122,484,772**

குறிப்பு 18

ஏனைய செலுத்த வேண்டியவை

விவரம்	2019	2018
ஊ. சே. நி மிகை	8,551,384	11,551,385
மின் பிறப்பாக்கி வாடகைக் கட்டணம்		1,851,999
	8,551,384	**13,403,384**

குறிப்பு 19

வெளிநாட்டு மாணியம்

விவரம்	2019	2018
வெளிநாட்டு மாணியம் - ஜப்பான் மற்றும் கொரியா	31,456,441	83,175,581
திருகோணமலை மாணியம் - ட்ச்வெல்	826,241,343	981,648,017
	857,697,784	**1,064,823,598**

குறிப்பு 20

ஓய்வூதிய நன்மைக் கடப்பாடுகள்

2019 டிசம்பர் 31 ஆம் திகதி உள்ளவாறானது

ஓய்வூதிய நன்மைக் கடப்பாடுகளின் நடைமுறைப் பெறுமதியிலுள்ள நகர்வுகள்

	2019	2018
மீளாயவாண்டில் ஆரம்பத்தில் ஓய்வூதிய நன்மைக் கடப்பாடுகள்	**200,322,804**	**227,277,117**
ஆரம்ப மீதிச் சீராக்கம்	(2,517,832)	
	197,804,972	**227,277,117**
வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்ட செலவு		
தற்போதைய சேவைக் கிரயம்	9,375,532	8,140,535
சீராக்கம்		945,244
வட்டிக் கிரயம்	19,095,278	22,349,691
	28,470,811	**31,435,470**
ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட வருமானம்		
இயல்பான (பெறுகை)/நட்டம்	56,569,495	(11,171,098)
சீராக்க (பெறுகை)/நட்டம்		2,517,832
மொத்தக் கொடுப்பனவு		**(8,653,266)**
செலுத்திய நன்மைகள்		(2,366,132)
திட்டத்தால் செலுத்தப்பட்ட நன்மைகள்	(50,416,830)	(46,425,141)
சீராக்கம்		(945,244)
	(50,416,830)	**(49,736,517)**
கடப்பாடுகளின் நடைமுறைப் பெறுமதி	**232,428,448**	**200,322,804**

எடுகோள்களின் முதன்மை

கழிவு வீதம்	11.88%	11.88%
எதிர்கால சம்பள அதிகரிப்புக்கள்	3%	5%
ஓய்வூதிய வயது	60 yrs	60 yrs
ஆளணிப் புரள்வு வீதம்	2%	2%

2019 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவுபெற்ற ஆண்டுக்கான கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் தொடர்பில் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

எனது இல. எம்ஈடி/எஸ்எல்பிசீ/1/19/550 திகதி: 2020 நவம்பர் 20 ஆம் திகதி

தலைவர்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் 2019 டிசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் படியிலான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை.

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 கணக்காய்வுக்குத் தகுதி பெறுதல் பற்றிய அபிப்பிராயம்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின்நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமையாண்மை மாற்றக் கூற்று மற்றும் அத்திகதியன்று முடிவடையும் ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் உள்ளடங்கலான முக்கிய கணக்கீட்டு தராதரங்களை உள்ளடங்கிய 2019 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் நிதிக் கூற்றுக்கள் நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியன்று முடிவடையும் ஆண்டிற்கான் இலங்கை சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரகாரம் எனது கட்டளைக்கமைய கணக்காய்விற்குட்படுத்தப்பட்டன.. அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். இக்கணக்காய்வினை மேற்கொள்வதற்கு நான் பொது நடைமுறையில் உள்ள பட்டய கணக்காளர்களின் நிறுவனமொன்றினது உதவியைப் பெற்றேன்.

எனது அறிக்கையில் கணக்காய்விற்குத் தகைமை பெறும் எனும் அபிப்பிராயத்தைக் கொண்ட பகுதியில் விளக்கப்பட்டுள்ள விடயங்களின் செல்வாக்கினைத் தவிர,கம்பனி மற்றும் குழுமத்தின் 2019 டிசம்பர் 31 ஆம் திகதிய நிதி நிலைமை மற்றும் அத்தினத்தன்று முடிவடையும் வருடத்தின் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலானது இலங்கை அரசதுறைக் கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப, உண்மையான மற்றும் நியாயமான நிலைமையைப் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 கணக்காய்விற்குத் தகைமை பெறும் அபிப்பிராயத்திற்கான அடிப்படை

1.2.1 இலங்கைக் கணக்கீட்டுத் தராதரங்கள் மற்றும் நிதி அறிக்கையிடல் தராதரங்களுடன் இணங்காமை

(அ) கூட்டுத்தாபனத்தினால் தற்போது பராமரிக்கப்படும் குத்தகைச் சொத்துக்களுக்காக இலங்கை நிதி அறிக்கையிடல் தராதர இல. 16 இனைப் பயன்படுத்துவதன் மூலமாக ஏற்படவுள்ள பாதிப்பினை மதிப்பீடு செய்து நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 12 இன் 26 (அ) பந்தியின்படி ஓய்வூதிய நன்மைக் கடப்பாட்டிற்காக பிற்போடப்பட்ட வரிக் கணிப்பீட்டின் போது கணக்கீட்டு அடிப்படையைத் தீர்மானிக்கும் போது, நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்படும்

ஓய்வூதிய நன்மைக் கடப்பாட்டின் இயலளவுப் பெறுமதி ரூபா. 232,428,448 ஆன போதிலும், விரிவான வருமானக் கூற்றிற்கு சீராக்கப்பட்ட வருடத்தின் பணிக்கொடைக்கான ஏற்பாடு ரூபா. 85,040,305 எனக் காட்டப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக, வரி அடிப்படையானது, பூஜ்ஜியமாக இருக்க வேண்டியதுடன், ஓய்வூதிய நன்மைப் பொறுப்பில் வரி அடிப்படையாக ரூபா. 50,416,830 ஆகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், வருடத்தின் ஆயுள் எதிர்பார்க்கை நட்டமாகிய ரூபா. 56,569,495 இற்குரிய பிற்போடப்பட்ட வரிப் பெறுமதி ரூபா. 15,839,459 ஆனது ஏனைய விரிவான வருமானத்தில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 19 இன் படி 2018 ஆம் ஆண்டின் கழிவு வீதமாக இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்படும் வாராந்த பொருளாதாரக் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு நூற்றுக்கு 11.88 ஆகத் தீர்மானித்திருந்ததுடன் அச்சதவீதமானது 2019 ஆம் ஆண்டிற்கும் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட 2019 டிசம்பர் 27 ஆம் திகதி முடிவடைந்த வாரத்திற்கான பொருளாதாரக் குறிகாட்டிகளின் படி திறைசேரிப் பிணையங்களுக்குரிய சந்தைத் திரும்பல் வீதமானது நூற்றிற்கு 8.64 முதல் நூற்றிற்கு 10.54 வரையிலான பெறுமதியில் காணப்பட்டது. நியமத்தின் 84 ஆம் பந்தியின்படி சதவீதமானது ஓய்வூதிய நன்மைக் கடப்பாட்டில் குறிப்பிடத்தக்க பாதிப்பினை ஏற்படுத்துவதுடன், தற்போதைய சந்தை வீதம் தொடர்பில் உரிய மதிப்பீட்டினை மேற்கொள்ளாது முன்னைய வருடக் கழிவு வீதத்தையே மீளாய்வாண்டிற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

(ஈ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 37 இன் 30 ஆம் பந்தியின்படி மேலும் நிச்சயமற்ற பொறுப்பு அல்லாத தண்டப்பண வழக்கிற்றாக செலுத்தப்பட்ட ரூபா. 11,783,507 இனை மேலும் வகைப்படுத்தி ஏனைய பொறுப்புக்களாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) பிற்போடப்பட்ட வரிக்கொடுப்பனவினைக் கணக்கிடும்போது, 2018, 2019 ஆம் ஆண்டுகளில் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அட்டவணை மற்றும் அவ்வருடங்களின் நிதிக்கூற்றுக்களின் தரவுகளின் அடிப்படையில்2019 ஆம் ஆண்டிற்கான ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்பை சுயாதீனமாக கணக்கிடும்போது, வருட இறுதியில் தேறிய வரிப் பொறுப்பில் ரூபா. 318,240,140 வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) கூட்டுத்தாபனத்தினால் பராமரிக்கப்படும் இரண்டு வங்கிக் கணக்குகள் தொடர்பாக வங்கி மேலதிகப் பற்று மீதிகள்முறையே ரூபா. 36,746,228 மற்றும் ரூபா. 179,751நிதி நிலை அறிக்கையில் நடைமுறைப் பொறுப்பாக தனித்தனியாக குறிப்பிடுவதற்கு பதிலாக சந்தை மற்றும் பிற செலுத்த வேண்டிய மீதிகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

(இ) இந்திய ரூபா. 676,658 மீதி சென்னை வங்கிக் கணக்கு மீதியின் மீது வெளிநாட்டு நாணய இழப்பினை அடையாளங்கண்டிராமை காரணமாக அப்பெறுமதியில் வங்கி மீதிஅதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது.

(ஈ) கணினி மென்பொருள் மற்றும் கட்டிடங்களுக்காக முறையே ரூபா. 886,166 மற்றும் ரூபா. 67,864 குறைவாக தேய்மானமிடப்பட்டிருந்ததன் காரணமாகமீளாய்வாண்டின் நட்டம் ரூபா 954,030 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) ஓய்வூதிய நன்மைக் கடப்பாட்டினுள் வட்டி செலவு ரூபா. 23,499,231 இனை நிதிக்கூற்றுக்களில் ரூபா. 19,095,278 ஆகப் பதிவளிப்புச் செய்யப்பட்டதன் காரணமாக ஓய்வூதிய நன்மை வட்டி செலவு ரூபா. 4,403,953 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) 2018 நிதி ஆண்டிற்கானநிதிநிலை அறிக்கைகளின்படி தக்கவைக்கப்பட்ட நட்டத்தின் இறுதி மீதி ரூபா. 94,949,636 ஆகன போதிலும்,மீளாய்வாண்டில் நிதிக் கூற்றுக்களில் உரிமை மாற்ற கூற்றின் ஆரம்ப மீதி பூஜ்ஜியமாகக் காட்டப்பட்டிருந்தது.

(எ) 2018 ஆம் ஆண்டின் பொருள் இருப்பு மீளாய்வில் அடையாளங்காணப்பட்ட ரூபா. 1,430,845 பெறுமதியான அகற்றப்பட வேண்டிய இறுவட்டுக்கள், கெஸட் மற்றும் சஞ்சிகைத் தொகைகளை பயன்பாட்டிற்குப் பொருத்தமற்ற இருப்பாக காட்டுவதற்குப் பதிலான அப்புறப்படுத்தப்படும் வரை குறிப்பிடுவதற்கு இருப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) இலங்கை பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட உறுதிப்படுத்தல்களின்படி, 31 டிசம்பர் 2018 அன்று ஹுன்னஸ்கிரிய ஒலிபரப்பு நிலைய நிலத்திற்கு செலுத்த வேண்டிய மொத்த குத்தகை தொகை ரூபா. 12,305,708 ஆன போதிலும்,செலுத்த வேண்டிய குத்தகை தொகையாகரூபா.1,215,000.மட்டுமே கணக்குகளில் காட்டப்பட்டிருந்தமையால் செலுத்த வேண்டிய குத்தகை ரூபா. 11,090,708 ஆல் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) ஒலிபரப்பு நிலையமொன்றை நடாத்துவதற்காக 2019 ஆம் ஆண்டில் நீண்ட கால குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட குச்சவெளி பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள 199.5309 ஹெக்டெயர் நிலத்திற்காக செலுத்த வேண்டிய குத்தகை தொகையில் ரூபா. 124,344,000 ஆன தொகை 31 டிசம்பர் 2019 வரை கணக்குகளில் காட்டப்படவில்லை.

(ஊ) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் செலுத்தத் தவறியவரிப் பிரிவின் அறிக்கைகள் மற்றும் கூட்டுத்தாபன வரி செலுத்துதல்கள் தொடர்பாக வரிக் கணக்குகளின் படி,31 டிசம்பர் 2019 நிலவரப்படி மொத்த வரி பொறுப்பு (தண்டப்பணம் தவிர) ரூபா. 199,616,562 ஆனபோதிலும்,நிதி நிலைப்பாட்டின் அறிக்கையின் நிதி அல்லாத பொறுப்புகளின் கீழ்,ரூபா. 106,891,027 ஆகக் காட்டப்பட்டுள்ளதால், நிலுவை வரி பெறுமதியானதுரூபா. 92,725,535 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

1.2.3 மீதிகள் இணங்காமை

(அ) கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஒலிபரப்பு நேரகடன்பட்டோர் அட்டவணையின்படி,ரூபா. 231,733,058 ஆனபோதிலும் நிதி அறிக்கையின்படி ஒலிபரப்பு நேரகடன்பட்டோர்மீதி ரூபா. 231,611,659 ஆனபடியால்,ரூபா. 121,399 பெறுமதியான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டுள்ளது.

(ஆ) நிதி அறிக்கைகளின்படி, பெறத்தக்க வைப்பு மீதி ரூபா. 9,452,462ஆனபோதிலும் அட்டவணைப்படி நிலுவைத் தொகை ரூபா. 9,032,782 ஆகும்.ரூபா.419,680 அடையாளம் காணப்படாத மீதியொன்றை. நிதி அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளதன் காரணமாக பெறத்தக்க வைப்புத்தொகையானது அந்த தொகையில் அதிகமாக காட்டப்பட்டுள்ளது.

(இ) மீளாய்வாண்டிற்கான நிதிநிலை அறிக்கைகளுடன் வழங்கப்பட்ட அட்டவணையின்படி, மொத்த ஒலிபரப்பு நேர கடன்கொடுத்தோர் மீதி ரூபா. 13,924,704 ஆனபோதிலும், ஒலிபரப்பு நேர கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கின்படி அந்த மீதி 14,601,069 ஆக ரூபா. 676,365 இணங்காத மீதியொன்று அவதானிக்கப்பட்டது.

1.2.4 கணக்காய்விற்குச் சான்றுகளின்மை

கணக்குகளிலுள்ள பின்வரும் ஒவ்வொரு சொத்து, பொறுப்பு மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பாக ஒவ்வொரு விடயத்திற்கும் முன்னால் சுட்டிக்காட்டப்பட்ட சான்றுகள் கணக்காய்வுக்கு வழங்கப்படவில்லை.

கணக்கு விடயம்	பெறுமதிரூபா.	சமர்ப்பிக்கப்படாத சான்றுகள்
(அ) செலவுகள்	856,253	கொடுப்பனவு வவுச்சர்கள்
(ஆ) காணிகள்	7,761,326	நிலையான சொத்து பதிவேடு மற்றும் பௌதிக இருப்புச் சரிபார்ப்புப் பதிவுகள்
(இ) கட்டடங்கள்	193,700,207	நிலையான சொத்து பதிவேடு மற்றும் பௌதிக இருப்புச் சரிபார்ப்புப் பதிவுகள்
(ஈ) லக்ஹண்ட கிளை சந்தைக் கடன்பட்டோர்	12,807,802	கோப்பு விபரங்கள் மற்றும் விவரிக்கும் அட்டவணைகள்
(உ) இலங்கை வங்கி சென்னை வங்கிக் கணக்கு மீதி (676,658 இந்திய ரூபாய்)	1,768,243	மீதி உறுதிப்படுத்தல்கள்
(ஊ) சந்தைக் கடன்பட்டோர்	69,500,324	மீதி உறுதிப்படுத்தல்கள்

நிதி அறிக்கைகளுக்கான முகாமைத்துவம் மற்றும் நிர்வாகத்தின் பொறுப்பு

இந்நிதிக் கூற்றுக்களை இலங்கை அரசாங்க கணக்கீட்டுத் தராதரங்களுக்கேற்ப தயாரித்தல் மற்றும் நியாயமானதாகச் சமர்ப்பித்தலும் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக் கூடிய அளவுரீதியான பிழையான வெளிப்பாடுகளின்றி நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தினது பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனத்தைத் தொடர்ந்தும் நடாத்திச் செல்லும் இயலுமையைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தினது பொறுப்பாவதுடன், முகாமைத்துவமானது நிறுவனத்தை முடிவுறுத்துவதற்கு எண்ணியிருப்பின் அல்லது வேறு மாற்றுவழி இல்லாத போது, செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருப்பினும் தவிர, இடையறாது நிலைத்திருத்தல் அடிப்படையில் கணக்குகளை மேற்கொள்ளல் மற்றும் நிறுவனத்தின் இடையறாது நிலைத்திருத்தலுக்குரிய விடயங்களை வெளிப்படுத்துவது முகாமைத்துவத்தினது பொறுப்பாகும்.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செய்முறை தொடர்பான பொறுப்பானது, நிருவகிக்கும் தரப்பினால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டமூலத்தின் 16(1) உபவாசகத்தின் பிரகாரம், நிறுவனத்தின் வருடாந்த மற்றும் உரிய நேரத்திலான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமானவாறு, நிறுவனத்தினது வருமானம், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றி உரியவாறு புத்தகங்களையும் அறிக்கைகளையும் பராமரித்துச் செல்ல வேண்டும்.

1.4 நிதிக் கூற்றுக்களைக்களின் கணக்காய்வு தொடர்பாகக் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக் கூடிய அளவுரீதியான பிழையான வெளிப்பாடுகளின்றியது என நியாயமான உறுதிப்படுத்தலொன்றை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளரின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயத்தை உறுதிப்படுத்துதலானது உயர் மட்ட உறுதிப்படுத்தலாகிய போதிலும், இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வினை மேற்கொள்ளும் போது எப்போதும் அளவுரீதியான தவறான அறிக்கையிடலைக் கண்டுபிடிக்கப்படும் என்பதை உறுதிப்படுத்த முடியாது. மோசடி அல்லது தவறினது தனிப்பட்ட அல்லது ஒட்டுமொத்த செல்வாக்குக் காரணமாக, அளவுரீதியான தவறான அறிக்கையிடல் ஏற்படக் கூடியதுடன், இந்த நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு, பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதாரரீதியான தீர்மானங்களில் செல்வாக்குச் செலுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் தொழில்சார் நடுநிலையானதாகவும் துல்லியமாகவும் இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும்,

- மோசடி அல்லது தவறு காரணமாக, நிதிக் கூற்றுக்களில் ஏற்படக் கூடிய அளவுரீதியான பிழையான அறிக்கையிடலின் அபாயத்தை அடையாளங் காணும் போதும் மதிப்பீடு செய்யும் போதும் சந்தர்ப்பத்திற்கேற்ப, பொருத்தமான கணக்காய்வு விதிமுறைகளைத் தயாரிப்பதனூடாக மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படும் அபாயத்தைத் தவிர்ப்பதற்குப் போதியளவு மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதல் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். அளவுரீதியாக பிழையான அறிக்கையிடலின் தாக்கத்தை விட, மோசடி காரணமாக ஏற்படும் தாக்கம் தீவிரமாகவிருப்பதுடன், கூட்டுச்சதி, போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே தவிர்த்தல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டினைக் கைவிடல் போன்றவை காரணமாக மோசடி ஏற்படுகின்றது.

- சந்தர்ப்பத்திற்கேற்ப பொருத்தமான கணக்காய்வு விதிமுறைகளைத் தயாரிப்பதற்காக நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான புரிந்துணர்வொன்று பெறப்பட்ட போதிலும், உள்ளகக் கட்டுப்பாட்டினை வினைத்திறன் பற்றிய கருத்தொன்றை வெளியிட உத்தேசிக்கவில்லை.

- பயன்படுத்தப்பட்ட கணக்கியல் கொள்கைகளின் சரியான தன்மை மற்றும் கணக்கியல் மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் நிர்வாகத்தால் செய்யப்பட்ட வெளிப்பாடுகளின் சாத்தியப்பாடு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் காரணமாக கூட்டுத்தாபனத்தின் இடையறாத நிலைத்திருத்தல் தொடர்பாக போதியளவிலான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றதா என்பது தொடர்பாகப் பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளினடிப்படையில், கணக்கீட்டினை மேற்கொள்வதற்கு நிறுவனமானது இடையறாது நிலைத்திருத்தல் தொடர்பான அடிப்படையினைப் பிரயோகிப்பதற்கான பொருத்தப்பாடு தீர்மானிக்கப்பட்டது. போதியளவு நிச்சயமற்றதன்மை காணப்படுவதாக நான் முடிவுக்கு வருவதாயின், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்பாடுகளுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்படுவதுடன் அவ்வெளிப்பாடுகள் போதியளவினதாக இல்லாவிட்டால், எனது அபிப்பிராயப்படி கணக்காய்வு செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், தொடர்ந்து நிலைத்திருப்பதானது எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளினால் முடிவுறுத்தப்படலாம். .

- வெளிப்பாடுகள் உள்ளடங்கலான நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பிக்கையில், நிதிக் கூற்றுக்களின் வியூகம் மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகவுள்ள கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

  எனது கணக்காய்வினுள், அடையாளங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிருவகிக்கும் தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

2. **ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்கமைப்புத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கும்.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (அ) வாசகத்தில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின்படி, எனது அறிக்கையில் கணக்காய்வுக்குத் தகுதி பெறும் அபிப்பிராயத்திற்கு அடிப்படையான பகுதியில் விளக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்து எழும் செல்வாக்கினைத் தவிர, கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் என்னால் பெறப்பட்டுள்ளதுடன், எனது பரிசீலனையில் விளங்கும் விதத்தில் உரிய நிதி அறிக்கைகளை கூட்டுத்தாபனமானது பராமரித்து வந்துள்ளது.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) ஆ (III) ஆம் வாசகத்தின் தேவைப்பாடுகளின்படி,கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் இணங்குகின்றன.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) ஆ (IV) ஆம் வாசகத்தின் தேவைப்பாடுகளின்படி இந்த அறிக்கையின் 1.2.2. (ஏ), (ஐ) மற்றும் 1.2.3 (ஆ) பந்திகளில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்கள் தவிர கடந்த வருடத்தில் என்னால் வழங்கப்பட்ட பரிந்துரை மூலம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

பின்பற்றப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகளினடிப்படையில், போதியளவிலான விடயங்களுக்கு வரையறுக்கப்படுவதினுள் பின்வரும் வெளிப்படுத்தலை மேற்கொள்ளக் கூடிய எதுவும் எனது அவதானிப்புக்குட்படவில்லை.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஈ) வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் நிறுவனத்தின் நிருவாகச் சபையின் உறுப்பினரொருவருக்கு கூட்டுத்தாபனம் தொடர்பான குறித்ததொரு ஒப்பந்தம் தொடர்பில் நேரடியாக அல்லது வேறுவிதமாக சாதாரண வியாபார நிலைமைகளுக்குப் புறம்பாகத் தொடர்பொன்றுள்ளது என்பதாகும்.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வரும் அவதானிப்பு தவிர, குறித்ததொரு எழுத்துமூலமான சட்டமொன்றுக்கு அல்லது கூட்டுத்தாபனத்தின் நிருவாகச் சபையினால் வெளியிடப்பட்ட வேறுதேனும் பொது அல்லது விசேட கட்டளைகளுடன் இணங்காது செயற்பட்டுள்ளமையாகும்.

விதிமுறைகள், பிரமாணங்கள் அல்லது நிருவாகச் சபையினால் வெளியிடப்பட்ட ஏற்பாடுகளுக்கான மேற்கோள்	விபரம்
(அ) அரசாங்க நிதிச் சுற்றறிருபம் 03/2015 மூலம் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணங்கள் 371(2) (ஆ) மற்றும் 371 (5)	இடைக்கால முற்பணங்கள் அந்தந்த பணி முடிந்த 10 நாட்களுக்குள் தீர்க்கப்பட வேண்டும் என்றாலும்,ரூபா. 1,206,006 வசக்கட்டு பெறப்பட்டு 33 நாட்களிலிருந்து 14 வருடங்கள் வரை தாமதமாகிவிட்டது, அது 31 டிசம்பர் 2019 வரை தீர்க்கப்படவில்லை. ஒரு சிறப்புப் பணிக்காக அதிகபட்சமாக ரூபா. 100,000 இடைக்கால முற்பணம் பணியாளர் மட்ட அலுவலரால் கொடுக்கப்படலாம், கூட்டுத்தாபனம் 14 சந்தர்ப்பங்களில் கூறப்பட்ட அதிகபட்ச அளவைத் தாண்டி முன்கூட்டியே வழங்கியுள்ளது. ரூபா. 538,850 ஆனது 27 நாட்களில் இருந்து 567 நாட்களுக்கு தாமதமாகிவிட்டது, அவை டிசம்பர் 31, 2019 வரை தீர்க்கப்படவில்லை.
(ஆ) 2015மே 05 ஆம் திகதிய பொது முயற்சிகள் சுற்றுநிருப இல.PED1/2015 (i) 3.1 ஆம் பந்தி	கூட்டுத்தாபனஅதிகாரிகள் 04 பேருக்கு ஒதுக்கப்பட்ட வாகனங்களுக்கு,ரூபா. 1,323,456 ஆன தொகை 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் பாவனை வரம்பை மீறி மேலதிக எரிபொருளுக்காக செலவிடப்பட்டுள்ளது. 2019 ஏப்ரல், ஜூன், ஜூலை மற்றும் ஆகஸ்ட் மற்றும் 2020 ஜனவரி மாதங்களுக்குரூபா. 553,574 பெறுமதியான தொகைக்கு பணிப்பாளர்சபையின் முன்கூட்டிய ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அதே நேரத்தில்,கூட்டுத்தாபன பணிப்பாளருக்கு ஒதுக்கப்பட்ட வாகனத்தின் 2020 பெப்ரவரி முதல் ஜூன் வரையிலான மாதாந்த எரிபொருள் எல்லையை விஞ்சிய மேலதிக எரிபொருளுக்காக ரூபா. 95,763 செலவிடப்பட்டது.
(இ) 2015மே 05 ஆம் திகதி **பொது** முயற்சிகள் சுற்றுநிருப இல.PED1/2015இன் 3.3 ஆம் பந்தி மற்றும் 2016 மார்ச் 09 ஆம் திகதிய பொது நிருவாகச் சுற்றறிக்கை இல. 05/2016 இன் 02 ஆம் பந்தி	உத்தியோகபூர்வ வாகனத்திற்கு தகுதியான அதிகாரிக்கு ரூபா. 50,000 பெறுமதியான மாதாந்தபோக்குவரத்துக் கொடுப்பனவு மற்றும் உத்தியோகபூர்வ வாகனத்திற்குப் பதிலாக மாதாந்த எரிபொருள் கொடுப்பனவு அல்லது உத்தியோகபூர்வ வாகனத்தைப் பயன்படுத்துவதற்கான மாற்றுத்தெரிவு உள்ளது. ஆனால், 2020 பெப்ரவரி முதல் உத்தியோகபூர்வ வாகனமொன்று ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் இவ்வேற்பாடானது புறக்கணிக்கப்பட்டு2020 ஏப்ரல் முதல் ஜூலை வரை பணிப்பாளருக்கு போக்குவரத்து கொடுப்பனவாக ரூபா. 200,000 மற்றும் ரூபா. 93,160 பெறுமதியான எரிபொருள் கொடுப்பனவும் வழங்கப்பட்டுள்ளது.
(ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் (i) நிதிப் பிரமாணம் 110 (ii) நிதிப் பிரமாணம் 396 (ஈ) (ii) மற்றும் (iii)	கூட்டுத்தாபனம் மீளாய்வாண்டில் சேத இழப்பிற்கான பதிவேட்டைப் பராமரிக்கவில்லை. 2019 டிசம்பர் 31 திகதிக்கு செல்லுபடியாகும் காலம் 6 மாதங்களினால் கடந்த போதிலும் கொடுபபனவிற்காக வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத ரூபா. 277,986 பெறுமதியான 60 காசோலைகள் தொடர்பாக பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(உ) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பணியாள்தொகுதி அறிவித்தல் இலக்கம் எஸ்.எல்பீ.சீ./3142 இன் 4 ஆம் வாசகம்	2019 டிசம்பர் 31 திகதிவரை தீர்க்கப்படாத முற்பணங்களினுள் அலுவலரொருவருக்கு வழங்கப்பட்ட ஒரு முற்பணம் செலுத்தித் தீர்க்கப்படாதுள்ள போதிலும், அதே அலுவலருக்கு மீண்டும் மீண்டும் முற்பணம் வழங்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் 10 அவதானிக்கப்பட்டுள்ளன. அதன்படி வருடம் பூராகவும் 10 அலுவலர்களினது கைகளில் முடங்கியிருந்த பணம் ரூபா. 1,476,171 ஆகும்.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (எ) வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் அதிகாரங்கள், பணிகளும் பொறுப்புக்களுடனும் இணங்காதவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஏ) வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புக்கள் தவிர, நிறுவன வளங்களை சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் மற்றும் பயனுள்ள விதத்திலும் உரிய காலவெல்லையினுள் குறித்த சட்டதிட்டங்களுக்கமைவாக, கொள்வனவு செய்து பயன்படுத்தப்படாமை.

(அ) 2019 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டத்தில் சேர்க்கப்பட்ட செயல்திட்டங்களில் இருந்து ரூபா. 38.95 மில்லியன் பெறுமதியான கட்டாயமாக செய்யப்பட வேண்டிய ஐந்து திட்டங்கள், செப்டம்பர் 25, 2020 வரை செயல்படுத்தப்படவில்லை. கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுக்களின்படி, 31 டிசம்பர் 2019 வரை,கூட்டுத்தாபனத்தின் மூலதன ஏற்பாடாக 75 மில்லியன் ரூபா வங்கியில் வைப்புச் செய்யப்பட்டது, அதில் 2015 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனத்தின் மறுசீரமைப்புப் பணிகளுக்காகரூபா. 63.5 மில்லியன் பெறப்பட்டது.

(ஆ) யாழ்ப்பாணம் யாழ் FM சேவைக்கான ஸ்டுடியோ வளாகத்தை நிர்மாணிப்பதற்காக 2018 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டத்திற்காக 42.50 மில்லியன்ரூபா ஒதுக்கப்பட்டது, 2019 ஆம் ஆண்டிற்குள், அந்த ஏற்பாடுகள் 28 மில்லியன் ரூபாவாகத் திருத்தப்பட்டதுடன் மற்றும் 2019 ஆம் ஆண்டின் இறுதியில் கட்டிடம் கட்டுவதற்கான நிலம் தீர்க்கப்படவில்லை, இதன் விளைவாக மதிப்பாய்வு செய்யப்பட்ட வருடத்தில் கட்டிடத்தின் கட்டுமானம் தொடங்கப்படவில்லை மற்றும் 15 செப்டம்பர் 2020 ஆம் திகதியன்று மதிப்பீட்டு ஆவணங்கள் மற்றும் கட்டட கட்டுமான ஒப்பந்தத்திற்கான செலவு மதிப்பீடுகளை தயாரித்துஇரண்டு வருடங்களுக்கு மேல் காலம் கடந்துவிட்டது.

3. ஏனைய கணக்காய்வு அவதானிப்புகள்

3.1 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) 1986 ஆம் ஆண்டிலிருந்து நிலுவையில் உள்ள 32 வருடங்களுக்கும் அதிகமான காலம்பழைய ஊழியர்களுக்கு அதிகமாகச் செலுத்தப்பட்டரூபா. 238,952 பெறுமதியான ஊழியர் சேமலாப நிதியின் பங்களிப்புத் தொகை 23 ஜூலை 2020 வரை அறவிடப்படாது முன்னோக்கி கொண்டு செல்லப்பட்டு வருகின்றது.

(ஆ) 2017மற்றும் 2018 ஆண்டுகளில் வழங்குநர்களுக்குச் செலுத்தப்பட்ட ரூபா. 449,415 பெறுமதியான முற்பணம் 31 டிசம்பர் 2019 வரை மீட்கப்படாது சந்தைப்படுத்தல் கடன்பட்டோராகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) 2 வருடங்கள் முதல் 19 வருடங்கள் வரை பழைய, பெற வேண்டிய நானாவித வருமானம், பெற வேண்டிய மின்கட்டணம் மற்றும் நானாவிதக் கட்ன்பட்டோரின் மொத்தம் ரூபா. 29,753,026இனை அறவிடுவதற்கு 2019 டிசம்பர் 31 வரை கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுக்கவில்லை.

(ஈ) 10 வருடங்களுக்கு அதிகம் பழைய வெளிநாட்டுக் கடன்பட்டோர் மீதிரூபா. 61,163,788 மற்றும் உள்நாட்டுக் கடன்பட்டோர் மீதிரூபா. 29,965,096 ஆகியவற்றை மீட்பதற்கு 2019 டிசம்பர் 31 வரை கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியன்று தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுக்குச் செலுத்தப்பட வேண்டிய மொத்தத் தொகையாகிய ரூபா.

149,420,035 ஆனது 1981 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டுவரை அதாவது, 38 வருட காலமாக தீர்க்கப்படாதிருக்கின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

3.2 முகாமைத்துவத்தின் வினைத்திறனின்மை

கூட்டுத்தாபனத்தின் செவிப்புல வளங்களை டிஜிடல் வழியில் பாதுகாக்கவும் தரவைச் சேமிக்கவும் 2017 ஆம் ஆண்டு முதல், கொரிய மானியங்களின் கீழ் பெறப்பட்ட கொரிய சேவையகம் (Server)பயன்படுத்தப்பட்டதுடன் அதில் டிஜிடல் வழியாகப் பாதுகாக்கப்பட்ட, "பாடல்கள்" மட்டுமே சேமிக்கப்பட்டதுடன் "நிகழ்ச்சிகள்" சேமிக்கப்படவில்லை. இதன் காரணமாக,கூட்டுத்தாபனம் எதிர்பார்த்த குறிக்கோள்களை அடைய முடியாததுடன் குறித்த கொரிய நிறுவனத்துடன் நிகழ்நிலைக் கட்டளைகள் (Online Commands) மூலம் இணைந்து நிகழ்ச்சிகளை இற்றைப்படுத்துவதற்கு அக்டோபர் 2017 வரை நடவடிக்கை எடுக்கவில்லை.

3.3 செயற்பாடற்ற / குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

(அ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான பயன்படுத்தப்படாத கட்டிடங்களின் நிலப்பரப்பு சுமார் 1126.45 சதுர மீற்றர்ஆவதுடன் அந்த கட்டிடங்களை அபிவிருத்தி செய்து பயனுள்ள விடயங்களுக்குப் பயன்படுத்தக்கூடிய இயலுமை காணப்பட்ட போதிலும், கூட்டுத்தாபனத்தால் பராமரிக்கப்படாது நீண்ட காலம் இருப்பதால் கட்டடங்கள் சேதமடைந்து வருவதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

(ஆ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான ஆறு வாகனங்கள்6 மாதங்கள் முதல் 3 ஆண்டுகள் வரை செயலற்ற நிலையில் காணப்படுவதால்இவ்வாகனங்களை அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்பட்ட போதிலும்மேற்கண்ட வாகனங்களில் 04 இனை அகற்றும் செயல்முறை 02 வருடங்களுக்கும் மேலாக தாமதமடைந்தது.

4. நிதி முகாமைத்துவம்

தனியார் வங்கியொன்றில் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான நடைமுறைக் கணக்கொன்றில் ரூபா. 3,244,526 மீளாய்வாண்டிள் பயன்படுத்தப்படாது இருப்பதன் காரணமாக அத்தொகையை வட்டி பெறும் கணக்கொன்றில் வைப்புச் செய்வதன் மூலம் பெறக்கூடிய வட்டி வருமானம் இழக்கப்பட்டுள்ளது.

5. ஆண்டறிக்கையைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் ஆண்டறிக்கைகள் 2020 ஒக்டோபர் 06 ஆம் திகதி வரை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை.

டப்ளியூ. பீ. சீ. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமையதிபதி

2019 ஆம் ஆண்டு கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை தொடர்பில் கூட்டுத்தாபனத்தின் கருத்துக்கள்

2019 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் பிறசட்ட மற்றும் ஒழுங்குமுறை தேவைப்பாடுகள் குறித்த 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 ன் பிரகாரம் கணக்காய்வாளர் தலையதிபதியின் அறிக்கை தொடர்பிலான கூட்டுத்தாபனத்தின் தெளிவுபடுத்தல்

மேற்படி அறிக்கை தொடர்பில் கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்பட்டபதில் அறிக்கையைப் பின்வருமாறு சமர்ப்பிக்கின்றேன்.

1.2.1 **இலங்கை கணக்கீட்டுத் தராதரங்கள் மற்றும் நிதி அறிக்கையிடல் தராதரங்களுடன் இணங்காமை**

அ. இலங்கை நிதி அறிக்கையிடல் தராதரம் 16

குறித்த குத்தகை சொத்துக்களை அகற்றுவது தொடர்பாக கூட்டுத்தாபனம் ஒருதிட்டவட்டமான முடிவை எடுக்கவில்லை என்பதால், அதை மதிப்பீடு செய்து நிதிநிலை அறிக்கைகளில் சேர்க்க முடியாது.

ஆ. இலங்கை கணக்கீட்டுத் தராதரம் 12

கணக்காய்வு அவதானிப்புகளுடன் உடன்படுகிறது. எதிர்வரும் ஆண்டுகளில் இதை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இ. இலங்கை கணக்கீட்டுத் தராதரம் 19

கணக்காய்வு அவதானிப்புகளுடன் உடன்படுகிறது. 2019 ஆம் ஆண்டில் சம்பள மாற்று சுற்றறிக்கைகளில் சம்பள உயர்வின் விளைவுகளை சரி செய்ததன் காரணமாக இந்த நட்டம் பதிவாகியுள்ளது. இது 2020 ஆம் ஆண்டின் பொருளாதார குறிகாட்டியை அடிப்படையாகக் கொண்டு திருத்தப்பட உள்ளது.

ஈ. இலங்கை கணக்கீட்டுத் தராதரம் 37

கணக்காய்வு அவதானிப்புகளுடன் உடன்படுகிறது. 2020 ஆம் ஆண்டு கணக்குகள் தயாரிப்பதில் சரியானவகைப்பாட்டின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

1.2.2 **கணக்கீட்டுக் குறைபாடுகள்**

அ. 2020 ஆம் ஆண்டில் பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பினைக் கணக்கிடுவதில் காணப்பட்ட மாற்றங்களைச் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆ. கணக்காய்வு அவதானிப்புகளுடன் உடன்படுவதுடன் அவை 2020 இல் திருத்தப்பட உள்ளன.

இ. கணக்காய்வு அவதானிப்புகளுடன் உடன்படுகின்றோம்.

ஈ. கணக்காய்வு அவதானிப்புகளுடன் உடன்படுவதுடன் 2020 ஆம் ஆண்டிற்குள் சரிசெய்யப்பட்டுள்ளன.

உ. கணக்காய்வு அவதானிப்புகளுடன் உடன்படுவதுடன் 2020 ஆம் ஆண்டில் திருத்தப்பட உள்ளது.

ஊ. கணக்காய்வு அவதானிப்புகளுடன் உடன்படுவதுடன் 2020 இல் சரிசெய்யப்பட்டது.

எ. கணக்காய்வு அவதானிப்புகளுடன் உடன்படுவதுடன் 2020 க்குள் சரிசெய்யப்பட்டது.

ஏ. உன்னஸ்கிரிய ஒலிபரப்பு வளாகத்திற்காக செலுத்தப்பட வேண்டிய மொத்தக் குத்தகைப் பணத்தைக் கணக்கிடும் போது பிழையொன்று ஏற்பட்டுள்ளது என்பதை ஏற்றுக்கொள்வதுடன் இந்தச் சிக்கலை அரசபெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்துடன் ஆலோசித்து இந்தசிக்கலை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

ஒ. இது தொடர்பாகக் குறிப்பிட்ட நிறுவனத்துடன் கலந்தாலோசித்து அமைச்சரவைப் பத்திரம் மூலம் குத்தகைக் கட்டணத்தை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

ஓ. கூட்டுத்தாபனம் வரிப் பொறுப்பு தொடர்பில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆவணங்களைப் பரிசீலித்து கூட்டுத்தாபனக் கணக்குகளை சரிபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

1.2.3 ஒப்பிட முடியாத மீதி

அ. கணக்காய்வு அவதானிப்புகள் சரியானவை, மேலும் அவதானிக்கப்பட்ட மாற்றம் 2020 ஆம் ஆண்டில் சரிசெய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆ. கணக்காய்வு அவதானிப்புகள் சரியானவையாகவுள்ளதுடன் அவை 2020 ஆம் ஆண்டில் சரிசெய்யப்படும்.

இ. கணக்காய்வு அவதானிப்புகள் சரியானவையாகவுள்ளதுடன் அவை 2020 ஆம் ஆண்டில் சரிசெய்யப்படும்.

1.2.4 கணக்காய்விற்கு ஆதாரங்கள் இல்லாமை

அ	செலவுகள்	ரூபா 856,253 பெறுமதியுடைய கொடுப்பனவு வவுச்சர்கள் பின்னர் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
ஆ	காணி	கணக்காய்வு அவதானிப்புக்களுடன் உடன்படுகின்றேன். காணி தொடர்பான அறிக்கையானது கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், நிலையான சொத்துப் பதிவேடானது நிதி ஒழுங்கு விதிகளின் பிரகாரம், பொது 287 மாதிரிப் படிவத்திற்கேற்ப தயாரிக்கப்பட்டுள்ளது.
இ	கட்டடங்கள்	மேற்படிபதில் பொருத்தமானதாகும்.
ஈ.	லக்ஹண்ட கிளை வியாபாரக் கடன்பட்டோர்	கணக்காய்வு அவதானிப்புக்களுடன் உடன்படுகின்றேன்.
உ.	இலங்கை வங்கியின் சென்னை வங்கிக் கணக்குமீதி	கணக்காய்வு அவதானிப்புக்களுடன் உடன்படுகின்றேன்.
ஊ.	வியாரக் கடன்பட்டோர்	கணக்காய்வு அவதானிப்புக்களுடன் உடன்படுகின்றேன்.

1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவம் மற்றும் நிருவகிக்கும் தரப்பினரது பொறுப்புக்கள்

மேற்படி விடயம் தொடர்பில் கணக்காய்வு சமர்ப்பிக்கப்பட்டுள்ள விடயங்களுடன் உடன்படுகின்றேன்.

1.4 **நிதிக் கூற்றுக்களைக் கணக்காய்வு செய்வது தொடர்பில் கணக்காய்வின் பொறுப்புக்கள்**

மேற்படிவிடயம் தொடர்பில் கணக்காய்வு சமர்ப்பிக்கப்பட்டுள்ள விடயங்களுடன் உடன்படுகின்றேன்.

2. **ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பான அறிக்கை**

மேற்படிவிடயம் தொடர்பில் கணக்காய்வு சமர்ப்பிக்கப்பட்டுள்ள விடயங்களுடன் உடன்படுகின்றேன்.

விதிகள், ஒழுங்கு முறைகள் அல்லது முகாமைத்துவச் சபை வழங்கிய ஒழுங்கு விதிகளைப் பார்க்கவும்

அ. கணக்காய்வு அவதானிப்புகளுடன் உடன்படுவதுடன் நிலுவையில் உள்ள முற்பணங்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்திச் செயற்பட எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆ. கணக்காய்வு அவதானிப்புகளுடன் உடன்படுகிறது. சுற்றறிக்கை 1/2015 இன் படி, 2020 ஆம் ஆண்டில் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

இ. i. கணக்காய்வு அவதானிப்புகளுடன் உடன்படுகிறது.

ii. கணக்காய்வு அவதானிப்புகளுடன் உடன்படுவதுடன் 2020 ஆம் ஆண்டில் திருத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது

ஈ. கணக்காய்வு அவதானிப்புகளுடன் உடன்படுகிறது.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு12 (எ) இல் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் அதிகாரங்கள், பணிகள் மற்றும் செயல்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை என்பது.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு12 (எ) இல் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம், பின்வரும் அவதானிப்புகள் தவிர, கூட்டுத்தாபனத்தின் வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் செயற்றிறனாகவும், உரியகாலப்பகுதியினுள் குறித்த ஒழுங்குவிதி முறைகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டுப் பயன்படுத்தப்படவில்லை என்பது.

அ. 2020 ஆம் ஆண்டின் இறுதிக்குள் இந்த நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆ. யாழ் எ.்.ப்எம் சேவையை தொடங்க நிலம் கையகப்படுத்தல் நடைபெற்று வருகிறது.

3. **ஏனைய கணக்காய்வு அவதானிப்புக்கள்**

3.1 **பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

அ. கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியானதாக விருப்பதுடன், மீதியைக் கணக்குகளிலிருந்து அகற்றுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆ. கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியானதாகவிருப்பதுடன், வழங்குநர்களின் முற்பணக் கணக்குகளைத் திருத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

இ. கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியானதாக விருப்பதுடன், நானாவிதக் கடன்பட்டோரிடமிருந்து அறவிட்டுக் கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

ஈ. கணக்காய்வு அவதானிப்புக்களுடன் உடன்படுகின்றோம்.

உ. கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியானதாகவிருப்பதுடன், 2016 ஆம் ஆண்டிற்கு முன்னரான மீதிகளைத் திருத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை

கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் போதியளவு கவனம் செலுத்தி நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

3.3 செயலற்ற / குறைாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

அ. கணக்காய்வில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

ஆ. கணக்காய்வில் குறிப்பிடப்பட்டுள்ள வாகனகங்களைக் கையுதிர்த்தல் விடயங்கள் தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

3.4 நிதிமுகாமைத்துவம்

அவசர நிலையில் பயன்படுத்துவதற்காகத் தக்கவைக்கப்பட்டுள்ளது.

3.5 ஆண்டறிக்கையைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

2016 2021.03.01 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

2017 2020.01.22ஆம் திகதியன்று அமைச்சிற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

2018 2021.03.25ஆம் திகதியன்று அரசாங்க அச்சகத் திணைக்களத்திற்கு அச்சிடுவதற்காக அனுப்பப்பட்டுள்ளது.

தவிசாளர்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்,



ශ්‍රී ලංකා ගුවන්විදුලි සංස්ථාව

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

Sri Lanka Broadcasting Corporation

Printed at the State Printing Corporation